# தமிழகத்தில் சமூகநிலை
## (13ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை)


**பேரா. கே. கே. பிள்ளை**


**(தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்துக்காக எழுதப்பட்ட 'தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்' என்ற ஆராய்ச்சி நூலில் இருந்து, 17ஆம் கட்டுரையான 'தமிழகத்தில் 13 முதல் 18ஆம் நூற்றாண்டு வரை சமூகநிலை' என்ற பகுதியின் மீள்பதிப்பு)**




**கட்டுரைச் சுருக்கம்** (திராவிடப் பொழில் ஆசிரியர் குழு எழுதியது)

*தனித்தன்மை தமிழ்நாட்டின் வரலாறு என்பது வெறுமனே மன்னர்களின் வாழ்வும் வரலாறும் மட்டுமல்ல; தமிழ் மக்களின் சமூகநிலையும் சமூகவாழ்வும் உள்ளடக்கியதே ஒட்டுமொத்தமான தமிழ்நாட்டின் வரலாறு. "நாடா கொன்றோ காடா கொன்றோ, அவலா கொன்றோ மிசையா கொன்றோ, எவ்வழி நல்லவர் ஆடவர் (மக்கள்), அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்று பேசும் புறநானூறு. ஆதலின், ஒரு நாட்டின் வரலாறு என்பது, அந் நாட்டு மக்களின் வழிவழி வந்த சமூக வரலாறு என்பதே.*

*தமிழ்நாட்டின் நெடிய வரலாற்றில், சங்ககால வரலாறு கடந்து, இடைக்கால வரலாறும் கடந்து, 13ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தின் சமூகநீட்சி தான், இன்றளவும் தமிழ்ச் சமூகத்தின் அடிநாதமாய்க் கோலோச்சிக் கொண்டுள்ளது. அச் சமூகநீட்சிகளுள், சாதி என்னும் சமூகநோய் இந்தக் காலத்திலும் முற்றிலும் மறையாது, ஆங்காங்கே ஆட்டுவித்துக் கொண்டுள்ளது.*

*13ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையுள்ள தமிழ்நாட்டின் காலம் மிகவும் குழப்பமானதொரு காலமாகும். ஆரிய மதம் வகுத்த பிராமணர்கள் முதலான பல சாதிப் படிநிலைகளோடு, பிற மதங்களும் தமிழ்நாட்டில் காலூன்றியதால் விளைந்த சமூக மாற்றங்கள் பலவும் ஆய்வுக்குரியவை.*

*அதிலும் குறிப்பாக, இடங்கை x வலங்கைச் சாதிப் பூசல்களால், தமிழ்நாட்டு மக்களின் சமூகவாழ்நிலை என்பது பெரிதும் மாறிப் போனது. அதுவே, இலக்கியம், இசை, கலை, கல்வி, வணிகம், சமயம், அரசியல், அதிகாரம் என்று சமூகத்தின் பண்பாடு மற்றும் நாகரிகத் தளங்கள் யாவற்றிலும் எதிரொலித்தது. அதன் பலதரப்பட்ட புள்ளிகளை, இக் கட்டுரை நுட்பமாக ஆய்ந்து நோக்குகிறது.*


**நூன்முகம்:** **(நூலைப் பற்றி ஆசிரியர் எழுதிய நூன்முகத்திலிருந்து, இக் கட்டுரைக்கான நோக்கினை மட்டும் திராவிடப் பொழில் ஆசிரியர் குழு தொகுத்தது)**

"தமிழாய்ந்த தமிழ்நாட்டின் வரலாற்றில் 15 முதல் 18ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம் மிகவும் குழப்பமானதொரு காலமாகும். தமிழகத்திலேயே கிடைக்கக் கூடிய சான்றுகளைவிட இஸ்லாமியப் பயணிகளும் ஐரோப்பியப் பாதிரிகளும் தரும் குறிப்புகள் மிகவும் பயனளிக்கக் கூடியனவாகவுள்ளன. எனினும் அவை யாவும் எதையும் சீர்தூக்கிப் பார்த்து எழுதப்பட்டன என்றோ, வரலாற்றுக் கூறுகள் அனைத்தையும் விளக்குவன என்றோ கூறுவதற்கில்லை.

இடைக்கால வரலாற்றில் கல்வெட்டுச் சான்றுகள் பெரிதும் பயன்பட்டு வந்துள்ளன. இக்கல்வெட்டுகளுள் பெரும்பாலான

கோயில்களுக்கும் மடங்களுக்கும் மக்களும் மன்னர்களும் வழங்கிய கொடைகளையே குறிப்பிடுவனவாகும். ஆகவே, அவற்றைக் கொண்டே தமிழ்ச் சமுதாயத்தின் வரலாறு ஒன்றை வகுக்கக்கூடும் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது பொருத்தமானதன்று.

எப்படி இலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள் அவ்வளவும் நம்ப முடியாதனவோ அப்படியே கல்வெட்டுச் செய்திகள் அவ்வளவும் நம்பத்தக்கன அல்ல. கல்வெட்டுகள் அவ்வப்போது பிற்காலத்தில் மாற்றி மாற்றியமைக்கப்பட்டதுமுண்டு. மேலும் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் இன்னும் வெளியிடப்படாமலேயே உள்ளன. எனவே, இந்நிலையில் கல்வெட்டுச் செய்திகளை மட்டுங்கொண்டு திட்டமான வரலாறு ஒன்றை வகுக்க முயல்வது சேற்றிலிட்டதூண் போலாகும். கல்வெட்டுச் செய்திகள் தனிப்பட்ட இலக்கியச் சான்றுகளாலும் வேறு குறிப்புகளாலும் உறுதி செய்யப்படுவது நலமாகும்.

## கட்டுரைத் தோற்றுவாய்:

தமிழகத்தில் பதின்மூன்று முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான கால அளவில் மக்கள் சமுதாயத்தில் பல துறைகளிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்களானவை நாட்டின் வரலாறு, மொழிவளர்ச்சி, அயலவரின் தொடர்பும் அரசாதிக்கமும், கிறித்தவர் இஸ்லாமியருடனான உறவுகள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. மன்னர்களும் மக்களும் தொடர்ந்து கோயில்களுக்கும், மடங்களுக்கும், பிராமணருக்கும் தானங்கள் அளித்து வந்துள்ளனர்.

வலங்கை - இடங்கையினரின் பூசல்கள் ஓய்ந்த பாடில்லை. அரசர்கள் அடிக்கடி அவற்றில் தலையிட்டு அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டுள்ளன.[1]

## பிராமணர்கள்:

பிராமணர்கள் மன்னரிடமும், குறுநில மன்னரிடமும் சிறந்த தொண்டர்களாகவும், வரும்பொருள் உணர்ந்தவர்களாகவும், திருவருள் பெற்றவர்களாகவும் நடந்து கொண்டனர். சோழப் பேரரசர்களைப் போலவே விசயநகரப் பேரரசரும், நாயக்கர்களும் பிராமணருக்குப் பேராதரவு தந்து வந்தனர்.[2] விசயரங்க சொக்கநாத நாயக்கன் திருவானைக்காச் சங்கர மடத்துக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான்.[3] அம் மடத்தில் சோறு, தோசை, அதிரசம், சுகியன் ஆகியவை நிவேதனம் செய்யப்பட்டன.

விசயநகரப் பேரரசும், நாயக்கரும், போசளரும் தமிழகத்துடன் அரசியல் தொடர்பு கொண்ட பிறகு, தெலுங்கரும் கன்னடியரும் ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் குடியேறினார்கள். அவர்களுள் பலர் பிராமணர்கள். பிராமணர்கள் பெற்று வந்த தனிச் சிறப்புகளையும், செல்வாக்கையுங் கண்டும் மனப்புகைச்சல் இன்றியே ஏனைய குடிமக்கள் அவர்களுடன் ஒத்து வாழ்ந்தார்கள் என்று சில வரலாற்று ஆசிரியர் கருதுவர். அவர்களுடைய கருத்துப் பொருத்தமானதன்று. பிராமணர்கள் நேர்மையும், கூர்த்த அறிவும், கணிதப் புலமையும், உடற்கட்டும் வாய்ந்தவர்கள் என்றும், ஆனால் அவர்கள் இறுமாப்புடையவர்களாகி மக்களின் வெறுப்புக்கு ஆளானார்கள் என்றும் போர்ச்சுகீசிய வணிகர் ஒருவர் எழுதியுள்ளார் (கி.பி. 1537). அதை நோக்குமிடத்துக் குடிமக்கள் அவர்களிடம் முழுக்க முழுக்க நல்லெண்ணமும் நல்லுறவும் கொண்டிருந்திருக்க முடியாது என்று ஊகிக்க இடமேற்படுகின்றது.

### முஸ்லிம்கள்:

தமிழகத்தில் முஸ்லிம்களின் குடியேற்றம் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டு விட்டதெனத் தெரிகின்றது. மாலிக்காபூர் படையெடுத்து வருவதற்கு முன்னரே முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் நுழைந்து பாண்டி மன்னர்களின் படைத் தொழிலிலும் ஈடுபடலானார்கள்.

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் (1216-38) ஒரு கழனிக்குத் 'துலுக்கராயன் குழி' என்று பெயர் வழங்கி வந்துள்ளது.[4] மற்றும் அரபியர்கள், யூதர்கள், பார்சியர்கள், சீனர்கள், மலேயர்கள், போர்ச்சுகீசியர்கள், வேறு பல ஐரோப்பிய நாட்டினர் ஆகியவர்கள் தமிழகத்துக்கு வந்து பல தொழில்களில் ஈடுபடலானார்கள். பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பார்சியர்கள் தமிழகத்தில் காணப்பட்டனர் என்று ஜோர்டானீஸ் பாதிரியார் கூறுகின்றார்.

### பிற சாதி வகுப்புகள்:

பொருளாதாரத்தின் அடிப்படையில் குலங்கள் நூற்றுக்கணக்கில் பெருகி வந்தன. சில குலங்கள் சிறுசிறு வகுப்புகளாகவும் பிரிந்து போனதுண்டு.

கம்மாளர்கள் (கண்மாளர்கள்), பொற்கொல்லர் (தட்டார்)களாகவும், தச்சர்களாகவும், கருமார்களாகவும், கன்னார்களாகவும், சிற்பிகளாகவும் பிரிந்தார்கள். இவ் வகுப்புகளுக்கிடையே விருதுகள், நடைமுறை உரிமைகள் ஆகியவற்றின் காரணமாக அடிக்கடி சச்சரவுகள் நேர்ந்ததுண்டு. ஒருமுறை மதுரை வீரப்ப நாயக்கன் தலையிட்டு இவர்களுடைய சச்சரவு ஒன்றைத் தீர்த்து வைத்தான்; நல்லுறவு உடன்படிக்கை ஒன்றையும் ஏற்படுத்தினான்.[5]

கருமார்களுக்கும், தச்சர்களுக்கும், தட்டார்களுக்கும் நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன.[6] இவ்வைந்து வகுப்பினர் ஒன்றுகூடல் (உடன்கூட்டம்) கூடாது என்று ஓர் அரசாணை பிறந்ததுண்டு.[7]

எண்ணெய் ஆடிய வாணியர் (செக்கார்) களுக்குள் பூசல்கள் ஏற்பட்டதுண்டு. ஒரு முறை, அவர்கள் அதைத் தீர்த்துக் கொண்டு தமக்குள் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளனர்.[8] வாணியர்கள் எள், இலுப்பைக் கொட்டை, தேங்காய், ஆமணக்கு ஆகியவற்றினின்றும் எண்ணெய் எடுத்தனர்; இலுப்பை நெய் கோயில் விளக்கெரிக்கவும் பயன்பட்டது.

குயவர்கள், வண்ணார்கள், நாவிதர்கள் ஆகியவர்கள் தத்தம் குலத்தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள். செட்டிகள் வாணிகம் செய்தார்கள். முஸ்லிம்களும் வாணிகத் தொழில் செய்து வந்தார்கள்.

உழவுத்தொழில், தொழில்கள்யாவற்றினும் தலையாயதாகப் போற்றப்பட்டு வந்தது. அரசாங்கத்துக்குக் கிடைத்த வருமானத்தில் பெரும்பகுதி உழவர்களிடமிருந்தே திரட்டப்பட்டது. ஏனைய கைத்தொழில்களும், மக்களின் குடிநலமும், வாழ்க்கைத் தரமும் உழவுத்தொழிலின் அடிப்படையிலேயே வளர்ந்து வந்தன.

### கைக்கோளர்கள்:

கைக்கோளர்கள் தமிழரின் சமூகத்தில் கம்மாளர்களைப் போலவே மிகவும் சிறப்பான இடம் பெற்றிருந்தனர். அவர்கள் ஏற்கெனவே கோயில் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். கைக்கோளர் படை எனத் தனிப் படைகள் வகுக்கப்பட்டிருந்தன. நாளடைவில் அவர்கள் நெசவுத்தொழிலில் ஈடுபட்டுக் குடிமக்களுக்குப் பலவகையான துணிகளை நெய்து கொடுத்தார்கள். ஊர்தோறும் கைக்கோளர்களுக்கெனத் தனித் தெருக்களே அமைந்திருந்தன.[9] கைக்கோளர்கள் நெய்துவந்த தறிகளுக்கு வரிகள் போடும் வழக்கம் தொடர்ந்து

காணப்படுகின்றது.[10] பட்டடை மூலாயம் என்பது விசயநகர மன்னர்கள் தறிகளின்மேல் விதித்த வரியாகும்.[11]

கைக்கோளர்கள் பல்லக்கு ஏறிச் செல்லவும், தமக்கு முன்பு சங்கு ஊதப்பெறவும் காஞ்சிபுரத்திலும் விரிஞ்சிபுரத்திலும் புதிய உரிமைகளைப் பெற்றனர்.[12] இவ் வுரிமைகளை வழுதலம் பட்டுக் கைக்கோளரும் வழங்கப் பெற்றார்கள்.[13] கைக்கோளருக்கு முதலிகள் என்று குலப் பட்டப் பெயர் வழங்கிற்று.[14] தேவரடியார்களில் ஒரு பிரிவினர் இக் குலத்தைச் சார்ந்தவர்களாகவும் இருந்தனர்.[15] கைக்கோளருடன் கம்மாளர்கள் சம உரிமைக்காகப் போராடியுள்ளனர். கைக்கோளர்கள் பாவாடை விரித்தல், பரிவட்டம் தாங்குதல் போன்ற உரிமைகள் வழங்கப் பெற்றிருந்தனர். அவற்றைக் கம்மாளரும் வற்புறுத்திப் பெற்றார்கள்.[16] நெசவுத் தொழிலின் இன்றியமையாமையை உணர்ந்து கைக்கோளர்கள் ஊரில் புதிதாகக் குடியமர்த்தப்பட்டதும், அவர்கள்மேல் விதிக்கப்பட்டிருந்த இடங்கை வரியினின்றும் அவர்கட்கு விலக்கு அளிக்கப்பட்டதும் கல்வெட்டுச் செய்திகளினின்றும் வெளியாகின்றன.[17]

வட ஆர்க்காடு மாவட்டத்தில் இப்போது வடபாதிமங்கலம் என்று வழங்கும் மாதேவி மங்கலத்தில் வாழ்ந்திருந்த கைக்கோளர்கள், செட்டிகள், கச்சவட வணிகர், சேனையங்காடிகள், கோயிலங்காடிகள், செக்கு வணிகர், உறைகாரார் ஆகியவர்கள் ஒன்றுகூடி, தனிநின்று வென்றான் நல்லூர், மாதேவிமங்கலம் ஆகிய இரு ஊர்களையும் 'அஞ்சினான் புகலிட'மாக நிறுவினார்கள்.[18] அரசு அல்லது மேற்குலத்தினர் இழைத்த கொடுமை யினின்றும் தப்பிய குடிகள் இந்த இடத்தில் அடைக்கலம் புகலாம்; அவர்கட்கு ஊறு ஒன்றும் விளையாது.

சேனையங்காடி என்னும் சொல், சேனைகள் நிறுத்தப்பட்டிருந்த இடங்களில் கடை திறந்து வாணிகம் செய்தவர்களையும், கோயிலங்காடி என்னும் சொல் கோயில்களில் கடை வைத்திருந்தவர்களையும் குறிக்கும் போலும். கைக்கோளரின் உரிமைகள், விருதுகள் முதலியவை கல்லில் பொறித்து வைக்கப்பட்டன. ஒரு முறை அத்தகைய கல்வெட்டு ஒன்றில் இருந்த எழுத்துகளை இலைவணிகர்கள் அழித்துவிட்டார்கள். அதனால் கைக்கோளர்களும் தேவாங்கர்களும் சினமுற்று ஊரைவிட்டே போய்விட்டார்கள். ஆகவே, அவர்களுடைய சினத்தை மாற்றும்பொருட்டு அழிக்கப்பட்ட சாசனத்தின் படியொன்று மீண்டும் நிறுத்தப்பட்டது.[19]

திருவண்ணாமலையில் இரு தெருக்களில் கைக்கோளர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குச் சங்கு, தண்டு, ஆனை, சாமரம் ஆகிய விருதுகளும், வலங்கைக்கு உள்ள வரிசைகள் அத்தனையும் நடத்தப் பட்டன.[20] கைக்கோளருள் மூத்தவன் பெற்ற கைக்கோளர் என்று ஒரு பிரிவும் இருந்து வந்தது.[21]

குதிரைச் செட்டிகள் என்ற ஒரு குலத்தினர் குதிரை வாணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.[22] அவர்கட்கு நாயக்கர்கள் என்றும் ஒரு பட்டப்பெயர் உண்டு. தென்னிந்தியத் துறைமுகங்களில் அயல்நாட்டுக் குதிரைகள் கப்பல்களில் வந்து இறங்கின. இவற்றை வாங்கி விற்ற குதிரைச் செட்டிகள் சங்கம் ஒன்று மலைமண்டலத்தில் தன் அலுவலகத்தை அமைத்திருந்தது. இதைப் பற்றிய செய்திகள் சில கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் காஞ்சிபுரத்துக் கல்வெட்டுகளினின்றும் தெரியவருகின்றன.

வடஆர்க்காடு மாவட்டம் போளூர் தாலுக்கா குன்றத்தூர் முதலிய கிராமங்களில் 'பூமிதேவபுத்திரர்' என்ற ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வந்தனர் எனத் தெரிகின்றது. குன்றத்தூரில் வலங்கை-

இடங்கை மீகாம சமாஜம் என்று ஒரு நிறுவனம் இருந்ததாகவும், அதன் கணக்குகளை எழுத ஒரு கணக்குப்பிள்ளை அமர்த்தப்பட்டிருந்தார் என்றும் அறிகின்றோம்.[23]

வடஆர்க்காடு மாவட்டத்தில் படைவீட்டில் நந்தகோபாலர், வண்துவராபதி என்ற குலங்கள் இருந்தன. அவற்றைச் சார்ந்தவர்கள் சோழ மண்டலத்திலும், மலைநாட்டிலும் வாழ்ந்திருந்தனர். அவர்கள் மன்றாடிகள் (இடையர்). நந்தகோபாலர் பிரிவுக்குள் புகட் கோபாலர், வீரகந்த கோபாலர், விசயகந்த கோபாலர் என்ற உட்பிரிவுகள் இருந்தன.[24]

மேலும் பல குலங்கள் கல்வெட்டுச் செய்திகளில் குறிக்கப்பட்டுள்ளன. கம்பளத்தார்,[25] கார்காத்த வேளாளர்,[26] ரெட்டிகள்,[27] கரைக்காட்டார்,[28] கடிகாரத்து முதலியார்[29] ஆகிய குலத்தார்களும் சிறப்புடன் வாழ்ந்து வந்துள்ளனர். வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் அரசாட்சி புரிந்து வந்த குறுநில மன்னர்களான சம்புவராயர்கள் வன்னிய குலத்தைச் சார்ந்தவர்கள் ஆவர்.[30]

## வலங்கை - இடங்கைப் பூசல்கள்:

வலங்கை-இடங்கை வகுப்பினரைப் பற்றி இந் நூற்றாண்டுகளில் பல விரிவான செய்திகளை அறிகின்றோம். இடங்கை வரி என்றும் வலங்கை வரியென்றும் வரிகள் விதிக்கப்பட்டு வந்தன.[31] இவ்விரு வகுப்புகளில் சேர்க்கப்பட்டிருந்த தனித்தனி 98 குலத்தினரைப் பற்றிய விளக்கம் ஒன்று அச்சுத தேவராளியரின் கல்வெட்டு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.[32]

இவ்விரு வகுப்பினரிடையே அடிக்கடி சச்சரவுகள் நேரிட்டன. இரு வகுப்பினரிடையேயும் உயிர்ச்சேதம் நேர்ந்துள்ளது. இத்தகைய வகுப்புக் கலகம் ஒன்று முதலாம் வீரவிருபாட்சன் காலத்தில் மலையம்பட்டில் விளைந்தது;[33] பிறகு அவர்களுக்குள் உடன்படிக்கையும் ஏற்பட்டது.

வலங்கை வகுப்பினரின் தலைவன் ஒருக்காப் புலியுடையான் என்பவனை, வருதன்பட்டி இடங்கை வகுப்பைச் சார்ந்த தனிப் புலித்தேவன் என்பவன் கொன்றுவிட்டான். அதனால் இடங்கை வகுப்பினருக்கு ஒருக்காப் புலியன் கொடுத்து வந்த தொல்லைகள் நீங்கின. வீரப்பநாயக்கரும் கண்மாளக் குலத்தைச்சார்ந்த ஐந்து பிரிவினரும் அவனைக் கொன்ற இடங்கை வீரனுக்குச் சில சிறப்புரிமைகள் வழங்கி, அதற்கான வரிசை மானியப் பட்டயத்தையும் உபயசமயப் பட்டயத்தையும் எழுதிக்கொடுத்தனர்.[34]

சில சமயம் இடங்கையினரும் வலங்கையினரும் ஒற்றுமையாக நின்று தமக்கு இடையூறு செய்தவர்களை எதிர்த்துத் தமக்குப் பொதுவில் நன்மை பயக்கக்கூடிய ஒப்பந்தங்களைச் செய்து கொடுத்துள்ளனர்.[35] இடங்கை மாசேனையார் என்பவர்கள் சந்திரகிரியில் வாழ்ந்து வந்தனர். அவர்கள்மேல் விதிக்கப்பட்ட இடங்கை வரியை வேளிருஞ்சேரி என்னும் இடத்தில் இருந்த தட்சிணாமூர்த்தி, அழகிய பெருமாள் கோயில்களின் திருப்பணிக்கென ஒதுக்கிக் கொடுத்தார்கள்.[36]

## பறையர்கள்:

விசயநகர அரசாட்சியின்கீழ்ப் பறையரின் நிலை தாழ்ந்து கொண்டே வந்தது. அவர்களுக்கெனச் சேரிகள் அமைக்கப்பட்டிருந்தன. சில சிறப்புரிமைகளையும் அவர்கள் போராடிப் பெற்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் பதினேழாம் நூற்றாண்டில் தேவேந்திர குடும்பர் என்ற குலத்தினருக்கும் பறையருக்குமிடையே பெரும்பூசல் ஒன்று விளைந்தது. அதன் விளைவாகப் பறையர்கள் வெள்ளானை,

வெண்குடை, கரடி (சிலம்பமாடுதல்), பகல் தீவர்த்தி, பாவாடை, இரு சிலம்புகள், இரு கொடுக்குகள் (இரு முன்றானையிலும் பூ வேலை செய்யப்பட்ட ஆடை), விழாக்களின்போது பதினாறுகால் பந்தல், பிணத்தைக் காடேற்றும்போது மூன்று தேர் உகைத்தல், பஞ்சவன் என்ற பட்டப் பெயர், பதினெண்வகை இசைக் கருவிகள் முதலியவற்றுக்கு உரிமை வழங்கப்பெற்றனர். அஃதுடன் அவர்களுக்கு ஒற்றைமாடி வீட்டில் வாழவும் உரிமை கிடைத்தது.[37]

பறைச்சேரி ஒன்றிலிருந்து கிடைத்த வருமானம் சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.[38]

### தேவரடியார்கள்:

தேவரடியார்கள் கோயில் பணியில் ஈடுபட்டு வந்தனர். தாயும் மகளுமான பெண்மக்கள் இருவர், பொன்னமராவதி கோயிலுக்கு அடிமைகளாகத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு கோயில் நிருவாகிகளிடம் பிழைப்பை நாடினர். நிருவாகிகள் அவர்களைக் கோயில் தேவரடியார்களாக அமர்த்திக்கொண்டு அவர்கட்கு வீடுகளும் நிலங்களும் வழங்கினர் என்று கல்வெட்டுச்செய்தி ஒன்று கூறுகின்றது.[39] திருமெய்யம் தாலுக்காவில் ராங்கியம் என்னும் ஊரில் கோயில் நிருவாகிகளும் ஊராரும் உமையம்மை என்ற பெண் ஒருத்தியைத் தேவரடியாராக ஏற்றுக் கொண்டு அவளுக்கு ‘நாலு திக்கும் வென்ற மாணிக்கம்’ என்ற விருதுப் பெயரையும் நிலங்களையும் வீட்டையும் வழங்கினர்.[40] தேவரடியார்க்குப் பாதங்களில் சூலக்குறிச் சூடுபோடும் வழக்கம் இருந்ததாகத் தெரிகின்றது.[41]

### சில பழக்கவழக்கங்கள்:

கிராம தேவதைகளின் கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கமானது பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இருந்து வந்ததற்குச் சான்று உண்டு. மேலைப் பனையூர்க் கல்வெட்டு ஒன்று[42] ‘...கோனாட்டு நாச்சியார் திருநாளுக்கு நம்முடைய ஊரில் இடையன் பொன்னன் கோன் எழும்பன் நம்முடைய திருநாளுக்கு வண்டியிலேயே கிடாய்க்குட்டி ஏற்றிவந்து சந்திதோறும் கிடாய் வெட்டினதுகொண்டு இரண்டு ஊராரும் இருந்து இவனுக்குக் ‘கலங்காத கண்டக் கோன்’ என்ற பட்டமுங் கொடுத்து, கோயிலிலே ஒடுக்கமும் கொடுத்து, இந்தப் பட்டமும், இந்த ஒடுக்கமும் இவனே அனுபவித்துப் போதக் கடவனாகவும், மேலும் திருநாளுக்குக் கிடாய்க்குட்டியும் இடுவனாகவும்...’என்று கூறுகின்றது.

மத்திய அரசாங்கம் வலுவானதாக இல்லாததால் அந்நாள்களில் தடியெடுத்தவன் தண்டக்காரன் என்று கண்ட கண்ட இடமெல்லாம் பாளையக்காரர்களும், நிலக்கிழார்களும் அரசு செலுத்திவந்தார்கள். ஆகவே, நாட்டில் கொள்ளையும் கொலையும் மலிந்து கிடந்தன.

நங்குபட்டி வட்டம் என்ற இடத்தில் இரு ஊராரிடையே பூசல் வளர்ந்துகொண்டிருந்தது. மாடு பிடித்துச் செல்வது, கத்தி கட்டாரிகளைக் கொண்டு எதிர்எதிர்க் கிராமத்து மக்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கண்டவர்களைக் கொல்லுவது ஆகிய கொடுங்குற்றங்களில் குடிமக்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இரு கிராமங்களிலும் இரத்த ஆறு பெருகிற்று. மக்கள் நூற்றுக்கணக்கில் கொலையுண்டு மாண்டு போனார்கள். எனவே, இரு கிராமத்துக் குடிகளும் ஒன்றுகூடித் தமக்குள் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, தாம் மேற்கொண்டு சமாதானமாக வாழ்ந்து வரவேண்டுமென்றும், பகைமையை மறந்து நட்புக்கொள்ள வேண்டுமென்றும், கோயிலுக்கு முன்பு வாக்குறுதி ஒன்று செய்துகொடுத்தனர்.[43]

வேறு ஒரு கிராமத்தில் இரு படைவீரர்கள் திடீரெனத் தோன்றி இருபது குடிமக்களைப் படுகொலை செய்தார்கள். அவர்களுடைய சினத்துக்குக் காரணம் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் செய்த கொடுங்குற்றத்துக்கு மூன்று மா நிலம் அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டதாக நெடுங்குடிக் கல்வெட்டு (1480) ஒன்று கூறுகின்றது.[44]

வேறு பல வியப்பூட்டும் பழக்கவழக்கங்களும் நாட்டில் பயின்று வந்ததற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. அரசு வழிகண்ட தேவன் என்னும் குறுநிலத் தலைவன் ஒருவனுடன் வலையர் உள்ளிட்ட குடிமக்கள் சிலர் அவனுக்கு ஒப்பந்தம் ஒன்று செய்து கொடுத்தனர் (1476).[45] அதன்படி, ஆடி மாதங்களிலும், கார்த்திகை மாதங்களிலும் அவனுக்கு அவனுடைய குடிமக்களான வலையர்கள் ஒவ்வொரு கண்ணி முயல்கள் கொடுத்து வரவேண்டுமென்றும், பறையரும் பள்ளரும் இருகோழிகள் கொடுத்து வரவேண்டுமென்றும், அவனுக்குப் பாவாடை, செம்மயிர், அடக்கம், நாடகசாலை, பகல் விளக்கு, ஏறச் சங்கு, இறங்கச் சங்கு, அங்கக் களரி, புளித்தண்டை, செண்பகராமன் வாழ்வு ஆகிய விருதுகளைக் கொடுத்து வரவேண்டுமென்றும் குடிமக்கள் ஒப்புக்கொண்டார்கள். இந்த விருதுகளில் பல இன்னவென விளங்கவில்லை.

மற்றொரு கிராமத்தில் வேறு ஒரு விசித்திரமான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.[46] ஊரில் ஏதேனும் ஒரு வீட்டில் மரணம் நேர்ந்தால், ஈமச்சடங்குகள் செய்வதற்கு அவ்வீட்டில் பெண்கள் இலராயின் 'வலைச்சி முக்காடு இட்டுச் சவத்துக்கு முன்னே மயானத்துக்குக் கூட்டிச் சவம் அடுக்கினால், மற்றாம் நாள் தண்ணீர் சொரிஞ்சு காடு ஆற்றுகிறதும், இரண்டு தொழிலும்...' வலையர்கள் செய்து வரவேண்டியவராக இருந்தனர். 'கூலிக்கு மாரடிப்பது' என்னும் வழக்கம் அக்காலத்திலும் இருந்தது வியப்பேயாகும்.

குற்ற விசாரணையின்போது பழுக்கக் காய்ச்சிய கொழு ஒன்றை உருவச்செய்து குற்றம் கண்டுபிடிக்கும் முறையை மக்கள் கையாண்டு வந்ததுண்டு.[47]

தமிழகத்தில் காணப்பட்ட பல பழக்கவழக்கங்களைப் பற்றியும், குல ஒழுகலாறுகளைப் பற்றியும், பெண்மக்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் கிறித்தவப் பாதிரிகள் பலர் எழுதி வைத்துள்ளனர். இந்து சமயத்தைப் பழிக்கவேண்டுவதும், மக்களின் பழக்கவழக்கங்களை எள்ளி நகையாட வேண்டுவதும், கிறித்தவ சமயத்தை உயர்த்திக் கூற வேண்டுவதும் அப்பாதிரிகளின் சீரிய நோக்கமாகும். எனவே, அவர்கள் தம்முடைய நூல்களில் பல மிகைபாடுகளையும், பொய்ச் செய்திகளையும், திரிபுகளையும் சேர்த்துள்ளனர். அவற்றைப் புறக்கணித்து, அவர்களுடைய நூல்களில் மெய்ப்பொருள் காண வேண்டியது வரலாற்று ஆய்வாளரின் கடமையாகும்.

தாம் நேரில் கண்டவற்றையும், கேட்டவற்றையும், படித்து அறிந்தவற்றையும், கற்பனை செய்துகொண்டவற்றையும் தொகுத்து நூல் எழுதியவர்களுள் தலையாயவர் ஆபி டூபாய் (Abbe Dubois) என்ற பாதிரியார் ஆவார். அவர் பிரெஞ்சு நாட்டினர்; 1770-ல் பிறந்தவர். தம் வாணாளின் பெரும் பகுதியையும் அவர் தமிழகத்திலேயே கழித்தார். தமிழரிடையே கலந்து பழகி அவர்களைப்போலவே உண்டு உடுத்தி வந்தார்; மக்கள் வாழ்க்கையை விரிவாக ஆராய்ந்து, 'இந்துக்களின் பழக்க வழக்கங்களும் சடங்குகளும்' என்னும் நூல் ஒன்றை இயற்றினார்.

தமிழ்நாட்டிலேயே வாழ்ந்திருந்து அவர் அந்நூலை இயற்றினாராயினும் அவர் அதில் கொடுத்துள்ள செய்திகளில் ஒருசில தவிர

ஏனையவை அனைத்தும் தமிழகத்தைப் பற்றியவையல்ல. அந்நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ள சில நிகழ்ச்சிகள் கற்பனை எனத் தோன்றுகின்றன.

பெண்கள் ஆயிரக்கணக்கில் உடன்கட்டை ஏளினர் எனப் பல செய்திகளை அவர் கூறுகின்றார். மன்னர்களின் குடும்பங்களைத் தவிர ஏனைய குடிமக்களின் குடும்பங்களில் பெண்கள் பெருமளவில் உடன்கட்டை ஏறியதாகவேறுசான்றுகள்ஏதும்இல. எனினும், தமிழரின் சமுதாயமானது குலவேறுபாடு, பொருளற்ற சடங்குகள், எண்ணற்ற சிறு தெய்வ வழிபாடுகள், உயிர்ப் பலிகள் முதலிய கண்மூடிப் பழக்கங்களினால் அலைப்புண்டும் பிரிவுபட்டும் காணப்பட்டது என்பதை அந்நூலிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

கிறித்தவப் பாதிரிகள் சிலர் தம் நலனுக்காகச் செய்து வந்த ஆக்கப் பணிகள் தமிழருக்கும், தமிழ் மொழிக்கும் பலவிதங்களில் நன்மை பயந்தன. அண்டிறீக் பாதிரியார் (1520-1600) என்பவர் தமிழகத்தில் முத்துக்குளி துறையில் பரவமக்களிடையே சமயப் பிரசாரம் செய்துகொண்டிருந்தார். அவர் ஜெசூட் மரபைச் சேர்ந்தவர். முதன் முதல் தமிழில் அச்சு எழுத்துகளை வடிவமைத்த பெருமை இவரையே சாரும் (1577). அவர் கிறித்தவ சமயத்துடன் தொடர்புகொண்ட தமிழ் இலக்கிய ஏடுகள் பல எழுதியுள்ளார். அவரைப் போலவே ராபர்ட்-டி-நொபிலி என்ற ரோமாபுரிப் பாதிரியும் தமிழ்நாட்டில் அடி வைத்த ஓராண்டுக்குள் தமிழ்மொழியை நன்கு பயின்றார். தலையில் குடுமி வைத்துக்கொண்டார்; பூணூல் அணிந்தார். அவர் மக்களுக்குத் தமிழிலேயே விவிலிய போதனைகள் செய்து வந்தார். தமிழில் அவர் பல உரைநடை நூல்களையும் வழங்கியுள்ளார்.

**இலக்கியம்:**

சோழர்கள் பரம்பரை மறைந்து பாண்டியரின் ஆட்சி தோன்றிப் பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டுகளில் நாடு பல நடுக்கங்கட் குள்ளாயிற்று. அக் காரணத்தால் தமிழில் பெரிய காவியங்கள் ஒன்றேனும் எழவில்லை. எனினும் உரையாசிரியர்கள் பலர் தோன்றிப் பண்டைய காப்பியங்கட்கும், தொல்காப்பியத்துக்கும் உரை கண்டனர். சமணர்கள் தமிழில் சிறந்த புலமை எய்தியிருந்தார்கள். அவர்களுள் பெரும்பாலார் துறவிகளாகவேயிருந்து நூல்கள் இயற்றினராதலால் அந்நூல்களுக்குத் தனிச் சிறப்பும் ஏற்றமும் அளிக்கப்பட்டன.

கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகிய ஒழுக்கங்கள் அறங்களுக்கெல்லாம் தலையாயவை எனச் சமண முனிவர்கள் தம் இலக்கியப் படைப்புகளில் எடுத்துக் கூறிவந்தனர். தமிழகத்தில் 'புலால் உண்ணாதவர்கள்' எனப் பொருள்படும் 'சைவ மரபு' ஒன்று வளர்ந்து வந்ததற்கு வழிகோலியவர்கள் அறங்கூறிய சமணரேயாவர்.

தமிழிலும் வடமொழியிலும் பல சாத்திர நூல்களும், தோத்திர நூல்களும், புராணங்களும் இயற்றப்பட்டன. வடமொழிச் சொற்கள் விரவிய தமிழ் உரைநடை ஒன்று உருவாயிற்று. அதற்கு 'மணிப்பிரவாள' நடை என்று பெயர்.[48] முத்தும் பவளமும் கலந்த கோவை போன்று அழகுடைத்து என்பர் இந் நடையை, சமணரும் வைணவரும் இதைப் பெரிதும் கையாண்டனர்.

இதைச் சோழரின் கல்வெட்டுகளில் கையாண்டுள்ளதைக் காணலாம். ஸ்ரீ புராணம் என்னும் சமண காவியம் மணிப்பிரவாள நடையில் ஆக்கப்பட்டது. வில்லிபுத்தூராரின் மகாபாரதமும், கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணமும் புராணப் படைப்புகளில் மிகவும் புகழ் பெற்றவையாம். வேதாந்த சித்தாந்தக் கருத்துகளை விளக்கிப் பல சிறு நூல்கள் உரைநடையில் 'கட்டளைகள்' என்னும் தலைப்பில் எழுந்தன. சோதிடம்,

கணிதம், மருத்துவம் ஆகிய துறைகளிலும் நூல்கள் இயற்றப்பட்டன.

வடமொழியில் வியாச முனிவரால் ஆக்கப்பட்ட பாரதக் கதையைப் பலர் தமிழில் எழுதினர் என்ற செய்தியை இலக்கியங்களின் வாயிலாகவும், கல்வெட்டுகளின் வாயிலாகவும் அறிகின்றோம். அந் நூல்கள் இன்று முழு வடிவத்தில் கிடைத்தில. ஆனால், வில்லிபுத்தூராரின் பாரதம் சிதைவின்றித் தமிழகத்தில் வழங்கி வருவது அந்நூலின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. வில்லிபுத்தூரார் வைணவ மரபினர்; தென்னார்க்காட்டில் சனியூர் என்னும் ஊரில் பிறந்தவர். வைணவ இலக்கியத்துக்கும், வைணவ சமயத்துக்கும் சிறந்த பணியாற்றியவர். ஆதலால், வில்லிபுத்தூராரை ஆழ்வார் என்றே அழைப்பர். வரந்தருவார் என்று வில்லிபுத்தூராருக்கு ஒரு மகன் இருந்தார். அவரும் புலமை சான்றவர் என்பது தம் தந்தையின் நூலுக்கு அவர் வழங்கிய சிறப்புப் பாயிரத்தால் அறிகின்றோம்.

வடமொழிப் பாரதம் பதினெண் பருவங்கள் கொண்டது; வில்லியின் பாரதமோ பத்துப் பருவங்களில் முற்றுப் பெறுகின்றது. இந்நூல் சுமார் 4351 பாடல்களால் யாக்கப்பட்டது. இதில் வில்லிபுத்தூரார் தமிழ்ச் சொற்களையும், வடமொழிச் சொற்களையும் இணைத்து இணைத்துப் பாடியுள்ளார்; எனினும், வடமொழிச் சொற்கள் யாவும் ஓசையில் குன்றியும், மெலிந்தும், நெகிழ்ந்தும் தமிழ்ச் சொற்களுடன் கரைந்துவிடுகின்றன.

சந்தப் பாட்டுகளைப் பாடுவதில் வில்லிபுத்தூராருக்கு இணை அருணகிரிநாதர் ஒருவரைத் தாம் காட்டமுடியும்; நாடு நகர வர்ணனைகளிலும் கிளைக் கதைகளிலும் சொற்களையும் காலத்தையும் சிதறவிடாமல் நூல் தொடக்கத்திலேயே கதையையும் தொடங்கிவிடுகின்றார் இந் நூலாசிரியர். வில்லிபுத்தூராழ்வார் வைணவராயினும் பாரதக் கதையின் இடையிடையே சிவபெருமான் புகழை வாயாரப்பாடுவது இந்நூலின் தனித்த ஒரு சிறப்பாகும்.

பாரதக் கதையை இவர் பல மெய்ப்பாடுகள் தோன்றும்படி நாடக அரங்கின் காட்சிகளாக அமைத்துள்ளார். மக்களின் மனோதத்துவத்தை இவர் நன்கு உணர்ந்தவராகக் காணப்படுகின்றார். நம் நெஞ்சில் எழும் பலவகையான உணர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொண்டு அவற்றின் மாறுபாடுகளுக்கு ஏற்பத் தம் நூலில் படலத்துக்குப் படலம் திடீர்த் திருப்பங்கள் அமைத்தும், சொற்களைக் கோத்தும், சந்த வகைகளைக் கையாண்டும் கதையை விறுவிறுப்பாகவும், துரிதமாகவும் ஓட்டிச் செல்லுவது வில்லிபுத்தூராருக்கெனவே அமைந்துள்ள ஒரு தனிச் சிறப்பு எனலாம்.

வில்லியின் பாரதம் பதினெட்டு நாள் பாரதப் போர்முடிவுடன் முற்று பெறுகின்றது; பத்துப் பருவங்களில் அமைந்துள்ளது. இறுதி எட்டுப் பருவங்களையும் இவர் பாடினார் எனவும், அவை இப்போது மறைந்தொழிந்தன எனவும் சிலர் கூறுவர். ஆனால், நூலின் அமைப்பு அதற்கு மாறாகக் காணப்படுகின்றது. அட்டாவதானம் அரங்கநாதக் கவிராயர் என்பவர், பதினெட்டாம் நூற்றாண்டில் 2477 செய்யுள்கள் தாமே பாடிச் சேர்த்து வில்லியின் பாரதத்தை முடித்தார். சென்ற நூற்றாண்டில் நல்லாப் பிள்ளை என்பவர் முருகப்பிள்ளை என்பவருடன் இணைந்து 11,000 செய்யுள்கள் பாடிச் சேர்த்து வில்லியின் பாரதத்தை விரிவுபடுத்தியுள்ளார். வில்லிபுத்தூரார் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியிலும், பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்திருந்தவர் எனக் கொள்ளுவதற்கு இடமுண்டு.

இரட்டைப் புலவர்கள் வில்லிபுத்தூராரின் காலத்தவர்கள். இவர்கள் இருவரும் இணைந்தே பாடல்கள் இயற்றுவதை

வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவர்களுள் ஒருவர் குருடர்; மற்றவர் முடவர். முடவரைக் குருடர்தம் தோளின்மேல் ஏற்றிச்சொல்லுவார். இவ்விருவரும் மிகவும் ஆழ்ந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள். இவர்களைப் பற்றி நிலவும் செவிவழிக் கதைகள் பல. இவர்களுடைய பாடல்களில் நகைச்சுவையும் பொருள் நயமும் ததும்பி வழியும். திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா, ஏகாம்பரநாதர் வண்ணம், மூவர் அம்மானை, கச்சிக் கலம்பகம், கச்சியுலா ஆகிய பிரபந்தங்களையும் பல தனிப் பாடல்களையும் இவர்கள் பாடியுள்ளனர்.

வில்லிபுத்தூராரின் உடன்காலத்தவர் அருணகிரிநாதர். இவரைப் பற்றிய வரலாறுகள் பல உண்டு. ஒன்றுக்கேனும் சான்றுகள் காணப்படவில்லை. இவர் திருவண்ணாமலையில் பிறந்தவர்; பிரபுடதேவராயன் என்ற ஒரு விசயநகர மன்னன் காலத்தவர். இவர் ஊர்தோறும் சென்று முருகர்மேல் அழகிய, இனிய தமிழில் புகழ்மாலைகள் சாத்திவந்தார். இவருடைய பாடல்களுக்குத் 'திருப்புகழ்' என்றே பெயர் வழங்கி வரலாயிற்று.

அருணகிரிநாதர்காலத்தில் தேவரடியார்கள் கோயில் திருத்தொண்டுகளைக் கைவிட்டுத் தம் உடல் அழகை விற்றுப் பிழைக்கும் அளவுக்குத் தம் நிலையில் இழிந்துவிட்டனர். முஸ்லிம்கள் படையெடுப்புகளினாலும், தமிழகத்து மன்னர்களும் குறுநில மன்னர்களும் விளைத்த குழப்பங்களினாலும், தெலுங்கர் கன்னடியர் செல்வாக்குப் பெற்று வந்ததாலும் தேவரடியார்கட்குச் சோழ பாண்டிய மன்னர்கள் வழங்கி இருந்த நிவந்தங்கள் பறிபோயின போலும். தேவரடியார்கள் தம் உடைமைகளை இழந்து, பிழைக்க வழியொன்றைத் தேடிக்கொண்டதில் வியப்பேதுமின்று. கோயில் பணிகளுக்கும், சிறப்பாகத் தம் பிழைப்புக்காகவும் தேவரடியார்கள் தொடர்ந்து கலைகளை வளர்த்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அருணகிரிநாதர் தம் பாடல்கள் ஒவ்வொன்றிலும் முற்பகுதியில் தாசிகளின் உறவினால் நேரிடும் கேடுகளை மிக விரிவாக விளக்குகின்றார். பட்டினத்தார் போன்றவர்களும், பிறகு வந்த சமயத் தலைவர்களும் 'பெண்களைப் பழித்தல்' என்னும் மரபு ஒன்றைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். அருணகிரிநாதர் சந்தம் பாடி வில்லிபுத்தூராரை வென்றார் என்பர். ஆனால், அக் கருத்துக்குச் சான்றுகள் இல.

அருணகிரிநாதர் காலத்தில் சாக்தரின் இயக்கம் தமிழகம் முழுவதும் பரவியிருந்தது. அது நாளடைவில் சித்தர்களின் சமயமாக மாறிவிட்டது. சாக்த வழிபாட்டினரான சம்பந்தாண்டார் என்ற ஒருவரை அருணகிரிநாதர்வாதிட்டு வென்று அடக்கினார் என்று செவிவழி வரலாறு ஒன்று உண்டு. அருணகிரிநாதர் 16,000 திருப்புகழ்ப் பாடல்கள் பாடினார் என்பர். இப்போது எஞ்சியுள்ளவை 1304 பாடல்களேயாம். அவற்றைத் தேடிக் கண்டு பிடித்து, கோவைப்படுத்தி அச்சிட்டுதவியவர் வ. த. சுப்பிரமணிய பிள்ளை என்பார் ஆவார்.

திருப்புகழ்ப் பாடல்கள் சொற்சுவையும், இசை வளமும், தாளக்கட்டும் பொருந்திய சந்தப் பாடல்களாம். தமிழ் வண்மை, செய்யுள் மிடுக்கு, தொடைநயம், சந்த ஒலிகள், கற்பனையாற்றல், இதயக் கசிவு ஆகியவை இவருடைய பாடல்களில் ஒருங்கே பொலிவுறுவதைக் காணலாம். அருணகிரிநாதர் கந்தரந்தாதி, கந்தரநுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், திரு வகுப்பு முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். பத்துப்பாட்டில் முதலில் வைக்கப்பட்டுள்ள திருமுருகாற்றுப்படையில் திருவேரகம் என்னும் படைவீட்டைச் சுவாமிமலை

என்னும் ஊர் எனக் கொண்டு அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் குமரக்கோட்டத்தில் அருச்சகராக இருந்த கச்சியப்ப சிவாசாரியார் 10,346 விருத்தப் பாடல்களில் கந்த புராணம் என்று ஒரு நூல் பாடினார். அது மாபெருங் காவியங்களுள் ஒன்றெனப் பாராட்டப்படுகின்றது. அது கற்றவர்கள் கருத்தைக் கவர்வது. ‘கந்த புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை’ என்று ஒரு பழமொழி எழும் அளவுக்குப் பொருட்செறிவு கொண்டது. இப் புராணம் முருகக்கடவுளின் கதையை விரித்துரைக்கின்றது. சைவசித்தாந்தத்தின் தத்துவங்கள் இந்நூலில் பல இடங்களில் கதைப் பாத்திரங்களின் வாயிலாக விளக்கப்படுகின்றன. கந்தபுராணம் ஒரு கலைக்களஞ்சியமாகக் காட்சியளிக்கின்றது.

கச்சியப்ப சிவாசாரியார் காலத்தில் காணப்பட்ட பல பழக்கங்கள் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. குளத்தில் நீருக்குள் ஈட்டிகளை நாட்டித் தலைகீழாக அதில் விழும் வழக்கம் காஞ்சிபுரத்தில் இருந்தது. அதற்குக் ‘கருமாறிப் பாய்தல்’ என்று பெயர். திருமணத்தில் மணமகளின் காலை மணமகன் அம்மிமேல் எடுத்து வைத்தல், அவளுக்கு அருந்ததி காட்டுதல், மணமகன் அடிகளை மாமியார் பாலினால் கழுவுதல், மணமகளைத் தத்தம் செய்து கொடுத்தல் ஆகிய மணவினைகள் கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ளன.

காற்றாடிப் பட்டம் பறக்கவிடுதல், புனல் விளையாடுவது, கள் குடித்தல், கடாச்சண்டை செய்தல், யானைப்போர், கோழிப்போர் ஆகிய பொழுதுபோக்குகளில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். மக்கள் மகிழ்ச்சி மேலீட்டால் தம் மேலாடையை வானத்தில் வீசி எறிவதுண்டு. சில வீடுகளில் தரைக்கீழ் அறைகள் கட்டப்பட்டன.

பவணந்தி முனிவரின் நன்னூலுக்குச் சிறந்த உரை எழுதிய மயிலைநாதரும், உரையாசிரியர்கள் அனைவரினும் தலைசிறந்தவர் எனக் கொள்ளப்படுபவரான நச்சினார்க்கினியரும், திருக்குறள் உரையாசிரியர்களுள் மிகச் சிறந்தவர் எனப் பாராட்டப்படும் பரிமேலழகரும் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்.

தமிழகத்தில் அவ்வையார் என்னும் பெயரில் சிறப்புற்ற பெண்பாற் புலவர்கள் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஒருவர். அவர் அவ்வை குறள், விநாயகர் அகவல் என்னும் யோகநெறி நூல்களை இயற்றிச் சிறப்புற்றவராவார்.

காளமேகம் என்ற சிறப்புப் பெயர் பெற்ற மாபெரும் புலவர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பல கோயில்களுக்கும் சென்று பாடல்கள் பாடினார். இவர் எடுத்த எடுப்பில் விரைவாக ஆசு கவிகள் பாடும் திறமையும், புலமையும் வாய்ந்தவர்; எதையும் பொருட்படுத்தாமல் பிறருடைய குற்றத்தை எடுத்துக் காட்டி அதைக் களையும்பொருட்டுப் பாடல்கள் பாடுவார்; வசை பாடுவதிலும், வஞ்சப் புகழ்ச்சி பாடுவதிலும் ஆற்றல் படைத்தவர்.

‘வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்கோர்ச
யங்கொண்டான்;
விருத்த மென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன்; கோவை உலா அந்தாதிக்
கொட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள்; வசைபாடக்
காள மேகம்;
பண்பாக உயர்சந்தம் படிக்கா சலாதொருவர்
பகரொ ணாதே.’

என்னும் விருத்தப் பா ஒன்று புலவர்களின் தனிச் சிறப்புகளை எடுத்துக் காட்டுகின்றது.

கயாதரர் என்பவர் கயாதர நிகண்டு என்னும் நூலையும், சிதம்பரம் இரேவண சித்தர் என்பார் அகராதி நிகண்டு ஒன்றையும் இயற்றினார்கள். கடவுண்மாமுனிவர்என்பவர் மாணிக்கவாசகர் வரலாற்றை விரித்துத் திருவாதவூரர் புராணத்தை 545 செய்யுள்களில் பாடினார். மாணிக்கவாசகரைப்பற்றி இவர் கூறும் செய்திகளுக்கும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் கூறும் செய்திகளுக்கும், மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் திருப்பெருந்துறைப் புராணம் தரும் செய்திகளுக்கும் சிற்சில முரண்பாடுகள் உண்டு. தம் காலத்துக்கு முன்பு வழக்கில் காணப்படாத 'தொப்பி' என்னும் சொல்லைக் கடவுண் மாமுனிவர் ஆண்டுள்ளார்.

பதினைந்தாம் நூற்றாண்டில் சைவ சமய இலக்கியம் பெருவளர்ச்சி பெற்றது. காழிக் கண்ணுடைய வள்ளல் என்னும் சைவ முனிவர் 'ஒழிவில் ஒடுக்கம்' என்னும் ஞானநூல் ஒன்று பாடினார். இந் நூலுக்குப் போரூர் சிதம்பர சுவாமிகள் உரை ஒன்றை இயற்றியுள்ளார். இந் நூலை உரையுடன் வடலூர் இராமலிங்க சுவாமிகள் பதிப்பித்து வெளியிட்டார். சிவஞான வள்ளல் என்று மற்றொரு சைவ முனிவர் 'வள்ளலார் சாத்திரம்' என்னும் ஞான நூல் ஒன்றை வழங்கினார். மெய்கண்ட பரம்பரைச் சைவ சித்தாந்தத்துக்கும், இவருடைய சித்தாந்தக் கொள்கைக்கும் சிறிய வேறுபாடு உண்டு. தமிழில் முதன்முதல் அத்துவித வேதாந்தத்தைப் பற்றிய நூல்கள் இயற்றியவர் தத்துவராய சுவாமிகள்.

வைணவ மரபில் சிறந்து விளங்கியவர் மணவாள மாமுனிகள்; 1370-ல் பிறந்தவர்; இளமையிலேயே செந்தமிழ்ப் புலமையும் மெய்யுணர்வும் வாய்க்கப்பெற்றார். வைணவ சமயத்தில் தென்கலைப் பிரிவில் சிறப்பாக எண்ணப்படுபவர்கள் நம்மாழ்வார், இராமானுசர், மாமுனிகள் என்னும் மூவர் ஆவர்; நம்மாழ்வாருடன் வைத்துப் போற்றப்படும் அளவுக்கு அவர் சிறப்புற்றிருந்தார். மணவாள மாமுனிகளுக்குப் பெரிய ஜீயர் என்றும், ஜீயர் என்றும் பெயர்கள் உண்டு. இவர் எழுதிய பிரபந்தங்களுள் மிகவும் போற்றப்பட்டு வருவது 'திருவாய்மொழி நூற்றந்தாதி' என்பதாகும். வைணவ சமயத்தைத் தமிழகத்தில் பரப்புவதற்கு வானமாமலை ஜீயர் முதலிய 72 சிம்மாசனாதிகளை ஏற்படுத்தியவர் மணவாள முனிகள் தாம்.

## கணக்கு, மருத்துவம் & சோதிடம்:

சோழ நாட்டு முகரி என்னும் ஊரினரான காரி என்பார் 'கணக்கதிகாரம்' என்னும் நூல் ஒன்று எழுதினார். தமிழகத்தில் தம் காலத்துப் பயின்றுவந்த கணக்கியல் நுட்பங்களை இவர் இந் நூலில் விளக்கியுள்ளார். தமிழில் ஏரம்பம், கினராலயம், அதிகாரம், கலம்பகம், திரிபுவன திலமம், கணித ரத்தினம், சிறு கணக்கு ஆகிய கணக்கியல் நூல்களும் வழங்கி வந்ததாக இந்நூலில் உள்ள குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந் நாள் இந் நூல்கள் யாவும் மறைந்தொழிந்தன.

சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளிலும் பல நூல்கள் இயற்றப்பட்டன. தேரையர் என்பவர் மருத்துவ நூல்கள் எழுதியுள்ளார்; அறுவை மருத்துவத்திலும், நோய்த் தடைமுறைகளிலும், நோய் நாடும் முறைகளிலும் மிகவும் ஆற்றல் படைத்தவர். இவர் பெயர் 'தேரர்' என்றும் வழங்கி வந்தது. தேரையர் தமிழ்ப் புலமை சான்றவர்; சந்தக் கவிகள் பாட வல்லவர்.

## அரச இலக்கியம்:

சடையவர்மன் பராக்கிரம குலசேகரன், நெல்வேலி மாறன் என்ற இரு பாண்டியர் சீவல்லபனை அடுத்து அரசாண்டு வந்துள்ளனர். நெல்வேலி மாறனின் தலைமகன் சடையவர்மன் அதிவீரராம பாண்டியன் என்பவர் (1564-1604). இவருக்கு

அழகன் சீவக வேள் என்றும் ஒரு பெயர் உண்டு. இவர் தம் தந்தையின் நினைவாகத் தென்காசியில் குலசேகரமுடையார் ஆலயம் ஒன்று எழுப்பினார். அதிவீரராம பாண்டியன் சிறந்த செந்தமிழ்ப் புலவர்; நளன் கதையைத் தமிழில் பாடியுள்ளார். நைடதம் என்னும் பெயருள்ள அந் நூல் கற்பனை வளம், சொல்லழகு வாய்ந்தது. தமிழை முறையாகப் பயில்வோர் தொடக்கத்தில் இந் நூலைப் பயில்வர்.

நைடத்தில் காணப்படும் கற்பனைகள் கம்பராமாயணத்தை நினைவூட்டுவன. எக் காரணத்தாலோ இந்நூலின் பிற்பகுதி கற்பனையும், சொல்லோவியங்களுமின்றி ஓடிவிடுகின்றது. புகழேந்தியின் நளவெண்பாவுக்குப் பின்பு எழுந்த நளன் கதை இதுதான். நைடதம் விருத்தப்பாக்களால் ஆனது. அதிவீர ராமன் காசி காண்டம், கூர்மபுராணம், வாயுசங்கிதை, இலிங்கபுராணம் ஆகிய நூல்களையும் இயற்றினார். இவர் பாடியுள்ள வெற்றி வேற்கை என்பது மிகச் சிறந்த குழந்தை இலக்கியமாகத் திகழ்ந்து வருகின்றது.

அதிவீரராம பாண்டியன் காலத்திலேயே அவருடைய அண்ணன் உறவினரான வரதுங்கராம பாண்டியன் என்பவர் அரசாண்டு வந்துள்ளார். அவரும் அவருடைய மனைவியும் இருவருமே மிகச் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்கினர். இம் மன்னர் பிரம்மோத்தர காண்டம், கருவைக் கலித்துறை யந்தாதி, கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, கருவை வெண்பா அந்தாதி என்னும் நூல்களை இயற்றியுள்ளார். வரதுங்கன் முடிசூட்டு விழாவின்போது கலியன் கவிராயர் என்பார் நாண்மங்கலம், குடைமங்கலம் ஆகியவற்றைப் பாடி வாழ்த்தினார். மற்றொருவர் ஐயம்பெருமாள் சிவந்த கவி என்பவர் புரூரவச் சக்கரவர்த்தி கதையை 920 பாடல்களில் பாடினார். அதிவீரராம பாண்டியன் சுவாமிதேவர் என்பவரையும், வரதுங்கராம பாண்டியன் வேம்பற்றூர் ஈசான முனிவரையும் தம் குருநாதர்களாகக் கொண்டிருந்தனர்.

## சித்தர் பாடல்கள்:

தமிழகத்தில் சித்தர் பலர் அவ்வப்போது ஆங்காங்கு வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் ‘அழியாச் சித்தர்’ எனப் பாராட்டப்பட்டுள்ளனர்.[49] சித்தர் திருமூலரின் ஞானபரம்பரையில் வந்தவர்கள் என அவர்களுள் சிலர் கூறிக்கொள்ளுகின்றனர். சித்தர்கள் யாவர், அவர்கள் வாழ்ந்திருந்த காலம் எது, அவர்கள் பாடிய பாடல்கள் யாவை, அவர்களுடைய சமயம் எது என்னும் கேள்விகளுக்குத் தக்க விடை காண முடியவில்லை.

ஆயிரக்கணக்கான சித்தர் பாடல்கள் தமிழ்நாட்டில் வழங்கி வருகின்றன. யோகம், ஞானம், மருத்துவம், காயகற்பம், இரசவாதம், சோதிடம், மந்திரம், இந்திரசாலம் ஆகிய துறைகள் யாவற்றிலும் சித்தர்கள் பாடியுள்ளார்கள்.

சித்தர்கள் பதினெண்மர் எனத் தொகுத்துக் கூறுவர். அத்தொகையில் கோரக்கர் போன்ற வடநாட்டுச் சித்தர்களின் பெயர்களும் சேர்ந்துள்ளன. சித்தர் பாடல்கள் பலவற்றுக்கு எளிதில் பொருள் காணவியலாது. மறைபொருளான சொற்களைக் கொண்டு எளிய கருத்தை விளக்குவதும், எளிய சொற்களைக் கொண்டு மறைபொருள்களை விளக்குவதும் இவர்கள் கையாண்ட இலக்கிய மரபாகும். சித்தர் வரிசையில் அகத்தியருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இடைக்காடர், உரோமர், கொங்கணர், கருவூரார், சட்டை முனி, நந்திநாதர், பிண்ணாக்கீசர், போகர், இராமதேவர் என்ற யாகோபு ஆகியவர்களின் பெயர்களும் இவ் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் என்ற பெயருடைய சித்தர் ஒருவரும் ஞானப் பாடல்கள் பல பாடியுள்ளார். கருவூர்ச் சித்தர் முதலாம் இராசராசனுடன் தோழமை பூண்டவர். சித்தர்களுள் சிலர் சக்தி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். ‘வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம்’ என்று தாயுமான சுவாமிகள் இவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். சித்தர்கள் சமயத்துறையில் சமரசப் போக்குடையவர்களாகவும் சில சமயம் குறுகிய சமயக் கொள்கைகளைக் கடிந்தும் பாடியுள்ளனர். அகப்பேய், அழுகணி, குதம்பைச் சித்தர்கள் பாடிய பாடல்கள் இசையோடு பாடும் போது நெஞ்சையுருக்கக் கூடியவை.

இராமதேவர் என்று ஒரு சித்தர் சதுரகிரியில் வாழ்ந்தவர். அரேபியாவில் மெக்காவுக்குச் சென்று இஸ்லாம் மதத்தைத் தழுவி யாகோபு என்ற பெயரை ஏற்றுக்கொண்டார். மருத்துவம், இரசவாதம் ஆகிய துறைகளில் இவர் விரிவான நூல்கள் பாடியுள்ளார். இவர் பாடலில் துப்பாக்கி என்னும் சொல் ஆளப்பட்டிருப்பதால் இவர் 14 அல்லது 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கொள்ளலாகும். போகர் சீனநாட்டினர் என்றும், பழநி தண்டாயுதபாணி திருவுருவத்தை நவபாடாணத்தில் சமைத்துக் கொடுத்தவர் என்றும் கூறுவர். பழநிக் கோயிலில் இவருடைய சமாதி என்று ஓரிடத்தைச் சுட்டிக்காட்டுவர்.

சித்தர்கள் சித்தி பெற்றவர்கள். சித்தர்கள் பூமியைத் தோண்டி உள்ளே செல்லுபவர்கள் என்றும், வானத்தில் ஏறுபவர்கள் என்றும், கடலின்மேல் காலினால் நடந்து செல்பவர்கள் என்றும் குறுந்தொகையில் ஒரு செய்தி காணப்படுகின்றது.[50] சித்தர்கள் காயசித்தி பெற்று ‘மரணப் பெரும்பிணி வாராவகை’ கண்டவர்கள் என்றும், யோக முதிர்ச்சியினாலும் ஞான நோட்டத்தினாலும் உடலியக்கத்தைக் குறைத்துக்கொண்டு, ஒளி வடிவம் பெற்று, ஊன உடம்பை ஞான உடம்பாக்கி அதையே சிற்சபை அல்லது ஞான சபையாகக் கொண்டு, நடராசப் பெருமானை அச் சபையில் ஐங்கூத்து நிகழ்த்தச்செய்வதே சித்தர்களின் நோக்கம் என்று அவர்களின் நூல்களினின்றும் அறிகின்றோம்.

குமரகுருபர சுவாமிகள் மதுரைத் திருமலை நாயக்கன் உடன் காலத்தவர்; சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர்; சகலகலாவல்லி மாலை என்று கலைமகள் புகழ் ஒன்று பாடி இந்தியும் கற்றார் என்பர். இவர் இளமையிலேயே துறவு பூண்டார். இவர் பல பிரபந்தங்கள் பாடினார். திருமலை நாயக்கன் வேண்டுகோளுக்கிணங்கி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழையும், நீதிநெறி விளக்கம் என்னும் நீதிநூல் ஒன்றையும் இயற்றினார். நீதிநெறிவிளக்கம்திருக்குறளின்சுருக்கம்என்று போற்றப்பட்டு வருகின்றது. ‘மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்’ தமிழ் பயில்வோருக்கு ஒரு விருந்தாகும். குமரகுருபரர் பாடிய கந்தர் கலிவெண்பா என்பது சைவசித்தாந்த நுட்பங்கள் அவ்வளவையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டுகின்றது.

குமரகுருபரருக்குத் தமிழ்மொழியினிடம் அளவுகடந்த பற்றுதல் உண்டு. ‘தீஞ்சுவைக் கனியும் தண்தேன் நறையும், வடித்து எடுத்த சாரம் கனிந்து ஊற்றிருந்த பசுந்தமிழ்’ என்றும், ‘நறை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்சுவை’ என்றும் தமிழைப் பாராட்டியுள்ளார்.

## பாளையங்கள்:

மதுரை நாயக்கர்கள் ஆட்சியில் அரசரும் குடிமக்களும் சமய வாழ்க்கையில் பேரூக்கம் காட்டிவந்தனர். முன்னோர் வகுத்த ஒழுக்கநெறியே மனிதன் இட்ட சட்டத்தைவிட மேம்பட்டதாகக் கொள்ளப்பட்டது. இராச்சியம் பல நாடுகளாகவும், ஒவ்வொரு நாடும் பல மாகாணங்களாகவும்

பிரிக்கப்பட்டிருந்தன. ஒரு மாகாணம் என்பது பல ஊர்களையும், கிராமங்களையுங் கொண்ட ஒரு தொகுதியாகும்.

பாளையக்காரன் செலுத்திய திறையும் நிலவரியும் மத்திய அரசாங்கத்தின் சிறப்பான வருமானமாக இருந்தன. முத்துக் குளிப்பிலும் சங்கு எடுப்பிலும் மத்திய அரசுக்கு ஓரளவு வருமானம் கிடைத்து வந்தது. சோழர்காலத்துக் கட்டணங்கள், வரிகள் பலவற்றை விசயநகரப் பேரரசர்களும், நாயக்க மன்னர்களும் தொடர்ந்து தண்டி வந்தனர்.

நாயக்க மன்னர்கள் குடிநலத்தை உண்மையாகவே பேணி வந்த காவலராகக் காட்சியளிக்கின்றனர். பல துறைகளிலும் குடிமக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முயன்றனர். ஆனால் போர்களும், வெள்ளமும், பஞ்சமும், நோய்நொடிகளும் மக்களை வாட்டி வந்தன. பெரிய நகரங்களைச் சுற்றியும் அடர்ந்த காடுகள் மண்டிக் கிடந்தன. கான் விலங்குகளினாலும், வழிப்பறி கொள்ளைக் கூட்டங்களினாலும் மக்களுக்கு இடும்பை விளைந்தன. மதுரையைச் சுற்றி வளர்ந்திருந்த காடுகளில் புலிகளும், கரடிகளும், ஓநாய்களும் எண்ணற்றவை திரிந்து வந்தன. திருமலை நாயக்கன் புலி வேட்டைக்கென நிவந்தங்கள் அளித்திருந்தான்.

## வாணிகம்:

நாயக்கர்கள் காலத்தில் தமிழ்நாட்டில் வாணிகம் வளர்ச்சியுறவில்லை. கடற்படையும், கப்பல்களும் அவர்களிடம் இல்லாமையே அதற்குக் காரணமாகும். அயல்நாட்டு வாணிகம் தடைபட்டுக் கிடந்தது. போர்ச்சுக்கீசியரும் டச்சுக்காரரும் மதுரைத்துணி வகைகளைக் கொள்முதல் செய்து அவற்றுக்கு ஜப்பானிலிருந்து தோலையும், மொலுக்கஸிலிருந்து சம்பாரச் சரக்குகளையும் பண்டமாற்றுச் செய்துகொண்டனர். போர்ச்சுகீசியர் தூத்துக்குடியில் யானைகளை விற்று, வெடியுப்பைவாங்கினார்கள். மதுரையில்துணி வாணிகம் செழிப்பாக நடைபெற்றுவந்தது.

## சமயம்:

நாயக்கர்கள் காலத்திற் சைவ வைணவப் பூசல்கள் காணப்படவில்லை; ஒருமைப்பாடு நிலவி வந்தது. நாயக்க மன்னர்கள் கிறித்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பல நிவந்தங்களை வழங்கினர். திருமலை நாயக்கன் பல கோயில் திருப்பணிகளை மேற்கொண்டான். பேரூர்க் கோயிலில் கலியாண மண்டபத்துள் வைக்கப்பட்டுள்ள அழகிய சிற்பங்கள், காண்போர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும். அச் சிற்பங்கள் நாயக்கரால் அமைக்கப்பட்டவை. செந்நிறமான கருங்கற்களில் அவை செதுக்கப் பட்டுள்ளன. திட்டமிட்ட ஓர் அமைப்பில் மதுரை மீனாட்சி கோயில் விரிவடைவதற்குத் திருமலை நாயக்கன் மேற்கொண்ட முயற்சிகள் துணைபுரிந்தன. மரமும் இரும்புமின்றி வெறும் சுதையை மட்டுங் கொண்டு கட்டப்பட்டுள்ள மதுரைத் திருமலை நாயக்கன் மகால் கட்டடக்கலையின் வியப்பூட்டும் படைப்புகளுள் ஒன்றாகும்.

சிவன் வழிபாடும், திருமால் வழிபாடும் மிக உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டன. சிறுதெய்வ வழிபாடும் நாடெங்கும் காணப்பட்டது. கோயில் தொண்டுக்காகவும், வேதம் ஓதிவரவும் பிராமணர்களுக்குத் தொடர்ந்து தானங்கள் வழங்கி வரப்பட்டன.

திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவரும் திருமலை நாயக்கன் காலத்தவர். இந் நூல் எழுதப்பட்ட வரலாறு பலவாறாகக் கூறப்படுகிறது. பலாவின் சுளைபோன்ற இனிய, தனித்தனியான, முழுமுழுச் சொற்கள் கோக்கப்பட்ட செய்யுள்களால் ஆனது இந்நூல். இவர் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி ஆகிய நூல்களையும் பாடியுள்ளார்.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இளமையிலேயே துறவுக்கோலங் கொண்டவர்; வீரசைவச் சார்புடையவர். தமிழ் இலக்கியப் பண்டாரத்தில் இவருடைய பாடல்கள் விலையற்ற மணிகளாக ஒளிர்கின்றன. சோணசைல மாலை, நால்வர் நான்மணிமாலை, பிரபுலிங்க லீலை ஆகியவை இவருடைய இணையற்ற படைப்புகளாம்.

சைவ எல்லப்ப நாவலர் தலபுராணங்களையும், தோத்திரப் பாடல்களையும் பாடியுள்ளார். இவர் இயற்றிய அருணாசல புராணமும், அருணைக் கலம்பகமும் இலக்கியச் சிற்பங்களாக விளங்குகின்றன.

வைணவரான பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் மிகச் சிறந்த புலமையும், மெய்யுணர்வும் ஒருங்கே வாய்ந்தவர்; இவருடைய பாடல்கள் தமிழ்ப் புலமைக்கு ஓர் உரைகல்லாகக் கருதப்படுகின்றன. இவருக்குத் திவ்வியகவி எனவும், மணவாளதாசர் எனவும் வேறு பெயர்கள் உண்டு.

படிக்காசுப் புலவர் இராமநாதபுரத்து வேந்தரான இரகுநாத சேதுபதியின் அரசவைப் புலவராக வீற்றிருந்தவர்; அவருக்கு உடன்காலத்தவரான சீதக்காதி என்ற முஸ்லிம் வள்ளலைப் பற்றி அவர் பல பாடல்களைப் பாடியுள்ளார். சந்தப் பாடல்கள் பாடுவதில் இவர் வல்லவர். இவர் இயற்றிய தொண்டை மண்டல சதகம் இலக்கிய விருந்தாகவும், வரலாற்றுக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது.

தாயுமான சுவாமிகள் தமிழ் இலக்கியத்திலும் சைவசித்தாந்தத்திலும் தனியிடம் பெற்றவர்; திருச்சிராப்பள்ளியில் அரசாண்ட விசயரங்க சொக்கநாத நாயக்கன் (1706-32) காலத்தவர். இவர் 1759ஆம் ஆண்டில் மறைந்தார்என்றும்கூறுவர். இவருடையகாலம் இன்னதெனத் திருத்தமாகத் தெரியவில்லை. இவர் அரண்மனைப் பணியில் சிலகாலம் அமர்ந்திருந்து உலக இன்பங்களை வெறுத்துத் துறவு பூண்டார்; யோகத்திலும் ஞானத்திலும் மேலாம் படிகள் பல கைவரப்பெற்றார். திருமூலருக்குப்பின் பல சமயங்களுக்குள் சமரசம் கண்டவர் தாயுமானவர். ‘எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே’ என்னும் இவர் வாக்கானது தமிழகத்தில் மூலைக்கு மூலை ஒலித்து வருகின்றது. இவர்பாடிய பாடல்களுள் 687 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இப் பாடல்களுக்குப் பூவை கலியாண சுந்தர முதலியார் விரிவுரை ஒன்று எழுதியுள்ளார். வேதாந்திகளும், சைவசித்தாந்திகளும் ஆகிய இரு சமயத்தினருமே இவரைப் பாராட்டிப் பரவுவர். பல சந்தங்களில் இவர் பாடல்களுள் சில அமைந்துள்ளன.

இஸ்லாம் மதத்தினரான செந்நாப் புலவர்கள் பலர் நாயக்கர் காலத்தை அணி செய்துள்ளனர். சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர், வண்ணக் களஞ்சியப் புலவர், அலியார் புலவர், மதாறு சாயபு புலவர், நயினா முகமது புலவர், உமறுப் புலவர், குணங்குடி மஸ்தான் சாயபு, செய்குத்தம்பி பாவலர் ஆகிய புலவர் பெருமக்கள் அளித்துள்ள இலக்கியப் படைப்புகள் தமிழில் என்றும் நறுமணம் வீசும் வாடா மலர்களாகக் காட்சியளிக்கின்றன. உமறுப் புலவர் இயற்றிய சீறாப்புராணம் என்பது நபிகள் நாயகத்தின் வரலாற்றையும், அறிவுரையையும், சமயத்தொண்டையும் விளக்கிக் கூறுகின்றது. கம்பர் கையாண்ட பல சொல்லோவியங்களையும், பொருள் நயங்களையும் உமறுப் புலவரும் தம் நூலில் கையாண்டுள்ளார். சீறாப் புராணம் 5,027 பாடல்கள் கொண்ட ஒரு காவியமாகும்.

குணங்குடி மஸ்தான் சாயபு காயல்பட்டினத்தில் வாழ்ந்தவர். இவர் பாடிய பாடல்கள் யோகம், ஞானம், தோத்திரம் ஆகிய மெய்யுணர்வுப் படிகளில் செல்லுபவை. இவருடைய பாடல்களைப் பாடக்

கேட்போர் சில சமயம் அவை தாயுமானாரின் பாடல்களோ என மயங்குவதுண்டு. மஸ்தான் சாயபு வேறு நூல்களும் இயற்றியுள்ளார். அவற்றுள் அகத்தீசர் சதகம் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

**மக்கள் இலக்கியம்:**

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சியானது புதியதொரு துறையில் தாவி வடிவமைப்புப் பெறலாயிற்று. பொதுமக்கள் வழக்கமாகப் பேசும் சொற்களைக் கொண்டு தொடுக்கப்பட்டு ஆராயாமலே விளங்கக்கூடிய செய்யுள்கள் உண்டு என்று தொல்காப்பியனார் கூறியுள்ளார்.[51] அவை 'புலன்' என்னும் வகையைச் சார்ந்தவை. அவை 'குறவஞ்சி', 'பள்ளு' என்னும் புதிய வடிவில் தோன்றலாயின.

மதுரை நாயக்கமன்னன் முத்து விசயரங்க சொக்கநாத நாயக்கன் காலத்தில் வாழ்ந்தவரான திரிகூடராசப்பக் கவிராயர் 'குற்றாலக் குறவஞ்சி' என்னும் அழகியதொரு நூலைப் பாடினார். கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பைத் தருவது இந்நூல். இதில் காணும் சொல்லாட்சியும், பொருட்செறிவும், மெய்ப்பாடுகளும், இசையமைப்பும் ஈடிணையற்றவை எனப் பாராட்டப்படுகின்றன. திரிகூடராசப்பக் கவிராயரின் கற்பனைத்திறமும், சொல்வளமும், இயற்கையழகுகளைச் சொல்லோவியமாகத் தீட்டும் அமைப்பும் இவருடைய ஆழ்ந்து அகன்ற நுண்ணிய புலமையை எடுத்துக்காட்டுகின்றன. ரவிக்கை, சேலை, சலவை (புடைவை), சல்லி, சதிர் ஏறுவேன், கப்பல், சீனச்சரக்கு, துக்குணி (சிறிதளவு) என்னும் சொற்களை முதன் முதல் குற்றாலக் குறவஞ்சியில்தான் காண்கின்றோம்.

குறத்திகள் ஊர் ஊராகச் சென்று பெண்மக்களுக்குக் குறி சொல்லிப் பிழைக்கும் வழக்கமானது பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டில் தோன்றிவிட்டதென இந் நூலினால் அறிகின்றோம். இன்றும் கிராமப் புறங்களில் குறி சொல்லும் குறத்திகளும், பச்சை குத்தும் குறத்திகளும் அவ்வப்போது தோன்றி வருவதுண்டு. போகுது, வருகுது, போச்சுது, இருக்குது என்னும் கொச்சைச் சொற்களும் இந் நூலில் இடம் பெறுகின்றன. பிற்காலத்தில் எழுந்த கீர்த்தனைகளிலும், பாரதியாரின் பாட்டுகளிலும் இத்தகைய சொல்லாட்சி மலிந்து கிடப்பதைக் காணலாம்.

முக்கூடற்பள்ளு என்னும் இனிமையான ஒரு நாடக நூலை வேலன் சின்னத்தம்பி என்ற என்னயினாப்புலவர் என்பார் படைத்தளித்தார். ஒன்பான் வகை இலக்கியச் சுவைகளும் இந் நூலில் ததும்புகின்றன. எளிய நடை, இனிக்கும் சொற்கள், ஈர்க்கும் இசை, சொல்லோவியக் காட்சிகள் ஆகியவை இந் நூலின் சிறப்புகள்.

**தமிழ் வளர்ச்சியில் கிறித்துவத்தின் தொண்டு:**

பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சியில் கிறித்தவப் பாதிரிகளும் ஈடுபடலானார்கள். அவர்களுள் சிறந்தவர் பெஸ்கி பாதிரியார். வீரமாமுனிவர் என்னும் தமிழ்ப் பெயரில் இவர் தமிழ்மொழி வரலாற்றில் உயர்ந்ததோர் இடம் பெற்றுள்ளார். தமிழ்மொழியின் வளர்ச்சிக்கே புதிய திருப்பங்களை அமைத்துக் கொடுத்த பெருமையுடையவர் இப் பாதிரியார். அவ் வகையில் தொல்காப்பியனார், பவணந்தி முனிவர் ஆகியவர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர்.

வீரமாமுனிவர் தமிழில் புதிய முறையில் இலக்கியங்கள் படைத்தார். சில தமிழ் எழுத்துகளின் வரிவடிவத்தையும் சீரமைத்தார். வீரமாமுனிவர் இத்தாலியில் பிறந்தார் (1680). இளமையிலேயே துறவு பூண்டு கிறித்தவ சமயப் பணிக்காகத் தமிழகத்தை அடைந்தார். தமிழின் சீரும் சிறப்பும் அவர் உள்ளத்தைக்

கவர்ந்தன; தமிழ் வளர்ச்சிக்குத் தாமும் தொண்டு புரியலானார்.

அவர் தம் தொண்டுகளைத் தொடங்கிய சமயத்தில் தமிழகத்தில் அரசியல் கொந்தளிப்புகளும், கொலையும், கொள்ளையும் மலிந்து கிடந்தன. பாளையக்காரர்களும், முஸ்லிம் நவாபுகளும், படைகளும் மக்கள் வாழ்க்கையை நரக வாழ்க்கையாக்கி விட்டிருந்தன. மராத்தியக் குதிரைக்காரர்கள் ஆங்காங்குத் திடீர்திடீரெனத் தோன்றி மக்களைப் படுகொலை செய்தும், சொத்துகளைச் சூறையாடியும் சென்றனர். அடுத்த நாழிகை என்ன நேருமோ என்று மக்கள் அவலப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தச் சூழ்நிலையில் அயல்நாட்டினர் ஒருவர் தமிழகத்துக்கு வந்து, அமைதியான துறவு வாழ்க்கையில் தோய்ந்திருந்து தமிழ்ப்பணி ஆற்றினார் என்பது வியப்பூட்டும் நிகழ்ச்சியாகும். வீரமாமுனிவர் இத்தாலிய மொழி, கிரேக்கம், எபிரேயம் (Hebrew), இலத்தீன், பிரெஞ்சு மொழி, பார்சிமொழி, இந்துஸ்தானி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார். அவர் தமிழருடன் கலந்து உறவாடி அவர்களைப்போலவே வாழ்ந்திருந்து அவர்களுடைய இணக்கத்தையும் அன்பையும் கவர்ந்தார். தம்மை நாடிவரும் ஏற்றவரையும் ஏதிலாரையும் ஒருங்கே வரவேற்றுத் தம் அன்பையும், ஆதரவையும் சொரியும் தமிழ் மக்கள், வீரமாமுனிவருக்குத் தமிழில் ஏற்றங்கொடுத்து அண்மையில் அவருக்கு ஒரு சிலையையும் நாட்டியுள்ளனர்.

வீரமாமுனிவர் இயற்றிய 'தேம்பாவணி' என்னும் காப்பியம் தமிழில் இன்றும் ஒரு தேம்பாவணியாகவே விளங்கி வருகின்றது. அதில் வீரமாமுனிவர் புறநானூறு, குறள், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் கருத்துகளைச் சிறிதேனும் தயங்காமல் எடுத்தாண்டுள்ளார். அவர் சில இலக்கண நூல்களையும் இயற்றியுள்ளார். சதுரகராதி என்னும் அகராதி ஒன்றைத் தொகுத்து வெளியிட்டார். தமிழில் முதன்முதல் செம்மையான, இனிமையான, எளிய உரைநடை ஒன்றை உருவாக்கியவர் வீரமாமுனிவரேயாவார்.

பழங்காலத்திலும் உரைநடை கையாளப்பட்டு வந்துள்ளது. ஆனால், அஃதும் செய்யுளைப்போலவே மோனையையும் அடுக்கு மொழிகளையும் கொண்டிருந்தது. வைணவர்கள் 'ஈடு' என்னும் வியாக்கியானங்களில் கையாண்டது மணிப் பிரவாள நடையாகும். எனவே, தெளிவான, எளிய தமிழ்ச் சொற்களைத் தொடராக்கி, ஐரோப்பிய முறையில் உரைநடை வகுத்தவர் வீரமாமுனிவர். இவர் ஆக்கிய பரமார்த்த குரு கதையானது தமிழ்மொழியில் குழந்தை இலக்கியத்தில் இறவாத இடம் பெற்றுவிட்டது. இந்நூல் இளந் தமிழால் இயன்றது. குழந்தைகளின் கள்ளங் கபடமற்ற உள்ளத்தைக் கொள்ளைகொண்டு அவர்களை நகைக்க வைப்பதற்காகவே எழுந்த இலக்கியம் இது.

பல தமிழ்ப் புராணங்களும், தோத்திரப் பிரபந்தங்களும், வேதாந்த சாத்திரங்களுக்கு விளக்க உரைகளும் பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்தன. நிலையற்ற அரசியல் சூழ்நிலையில் அஞ்சி அஞ்சி மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலத்தில் வாழ்க்கைச் சூழலில் சிக்குண்டு இன்பதுன்பங்களில் தோய்வுறாமல் உளநிறைவுடன் சைவத் துறவியார் ஒருவர் திருவாவடுதுறையில் அமர்ந்து பல அரிய தமிழ் நூல்களை இயற்றினார். அவர்தாம் சிவஞான முனிவர்; மெய்கண்டாரின் சிவஞான போதத்துக்குச் சிற்றுரையும் பேருரையும் கண்டவர்; சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரை ஒன்றும் எழுதியுள்ளார்; இலக்கியம், இலக்கணம், சைவசமயம், தத்துவம், தருக்கம் ஆகிய

துறைகளில் இருபதுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். இவர் தருக்க வேந்தராகவும், பன்மொழிப் புலவராகவும், பசுந்தமிழ்ப் பாவாணராகவும், பல்கலைக் களஞ்சியமாகவும் விளங்கினார். இவருடைய பன்னிரண்டு மாணவர்கள் ஒப்பற்ற புலவர் பரம்பரை ஒன்றை உருவாக்கினர்.

சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சிபுராணம் கற்பனை வளமும், சொல்லழகும், இறை மணமும் கலந்து விரவியுள்ள ஒரு நூலாகும். காஞ்சிபுராணத்தின் முற்பகுதியை இவர் பாடினார்; இவருடைய மாணவரான கச்சியப்ப முனிவர் பிற்பகுதியைப் பாடி அதை முடித்தார். சிவஞானமுனிவர் பாடிய அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் பயில்தொறும் புதுப்புதுச் சுவைகளை நல்கக்கூடியது. அதனில் அம்புலிப் பருவப் பாடல்கள் புலவர்களுக்கு இலக்கிய இன்ப ஊற்றெனத் தகும்.

கச்சியப்ப முனிவர் சிவஞான முனிவரின் தலையாய மாணவர். இவர் தணிகைப் புராணம் ஒன்று எழுதியுள்ளார். சைவ சித்தாந்தக் கருத்துகள், அகப்பொருள் துறைகள், அணி வகைகள், பல்வேறு இலக்கண மரபுகள் ஆகியவற்றைக் கச்சியப்ப முனிவர் தம் நூலில் வைத்து இழைத்துள்ளார்.

## உரைநடை:

புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர் ஏற்றங்கண்டிருந்த காலத்தில் பிரெஞ்சுக் கவர்னர் டூப்ளே என்பவருக்கு உறுதுணையாக இருந்தவர் ஆனந்தரங்கம் பிள்ளை என்பவர். இவர் 1709-ல் பிறந்தார். இவருடைய பரந்த அனுபவத்தையும், நுண்ணறிவையும், நேர்மையையும் கண்டறிந்த பிரெஞ்சுக்காரர்கள் இவரைத் தம் திவானாக அமர்த்திக் கொண்டனர். இவருடைய தாய்மொழி தமிழ். எனினும் தெலுங்கு, மலையாளம், பிரெஞ்சுமொழி, போர்ச்சுகீசியமொழி ஆகியவற்றையும் நன்கு பயின்றிருந்தார். வானவியலிலும் சோதிடத்திலும் ஆனந்தரங்கம் பிள்ளைக்கு நல்ல புலமையுண்டு. தமிழ்ப் புலவர்களின் புரவலராகவும் திகழ்ந்தார். அருணாசலக் கவிராயர் பாடிய இராம நாடகம் என்னும் சிறந்த நூலானது ஆனந்தரங்கம் பிள்ளையின் முன்பு அரங்கேற்றம் செய்யப்பட்டதாகக் கூறுவர்.

இவர் தம் கைப்பட நாட்குறிப்பு ஒன்று தமிழில் எழுதி வைத்து வந்தார். அவருடைய காலத்தில் யாருமே புரிந்திராத அரியதோர் இலக்கியப் பணியாக விளங்குகின்றது இந் நாட்குறிப்பு. இஃது ஒரு பெரும் வரலாற்றுக் கருவூலமாகவும் திகழ்கின்றது. ஆனந்தரங்கம்பிள்ளை, ‘தாம் காதால் கேட்டவற்றையும், கண்ணால் பார்த்தவற்றையும், கப்பல்கள் வருவதையும், கப்பல்கள் போவதையும், ஆச்சரியங்களும் புதுமைகளும் நிகழ்ந்தால் அவற்றையும் இத் தினசரியில் குறிக்கின்றேன்’ என்று கூறி, இந்நாட்குறிப்பைத் தொடங்குகின்றார். அவர் நாளைய பிரெஞ்சுக்காரர்களைப் பற்றிய அரிய செய்திகள் பலவற்றை இந் நாட்குறிப்புகளில் படித்தறியலாம்.

ஆனந்தரங்கம் பிள்ளை கையாண்ட எழுத்து நடையே ஒரு புதுமையானதாகும். அவருடைய நாட்குறிப்புகளில் உயிர்த் துடிப்பும், உணர்ச்சி வெள்ளப் பெருக்கும், எழுச்சியும், ஏக்கமும், சினமும், துள்ளலும், உவகையும் பொங்கி வழிவதைக் காணலாம். இவருக்குப் பிறகு அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் இத்தகைய நாட்குறிப்பு ஒன்றை எழுதி வையாதது ஒரு குறைபாடாகும்.

## இசை:

தமிழகத்தில் அவ்வப்போது வடமொழியிலும், தெலுங்கிலும் இயல் இசை நாடகங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. திருவையாற்றில் அமர்ந்திருந்து தியாகராச சுவாமிகள் நூற்றுக்கணக்கான

கீர்த்தனைகளைத் தெலுங்கு மொழியில் பாடினார். இவர் கையாண்டுள்ள தெலுங்கு மொழியில் மென்மையும், இனிமையும், உருக்கமும் கொண்ட சொற்களைக் காணலாம். பாடல்கள் உள்ளத்தை இளக்கக்கூடியவை.

இக்காலத்துத் தெலுங்கில் காணப்படும் வடமொழிக் கலப்பு ஆரவாரத்தைத் தியாகையரின் பாடல்களில் காணமுடியாது. சுவாமிகளின் பாடல்களை நிறுத்தி, மென்குரலில் குதிப்பும் துள்ளலும் இன்றி, இசை மருட்டலும் இன்றிப் பொருள் உணர்ந்து பாடும்போது தமிழரும் கேட்டு இன்புறக்கூடும். அவ்வளவு எளிய சிறுசிறு சொற்களால் இவருடைய கீர்த்தனைகள் அமைந்துள்ளன. இசைப் புலவர்கள் தாந்தாம் கற்ற கலையுணர்வையும், கலையுயர்வையும் காட்டும் பொருட்டுச் சுவாமிகளின் கீர்த்தனைகளைப் பொருள் தேற்றமின்றியும், சொற்களைச் சிதைத்தும், மென்று விழுங்கியும், உணர்ச்சியின்றியும், பிறர்க்குப் பொருள் விளங்காவாறும் மேடைகளில் பாடி வருகின்றனர்.

இறைவன் உள்ளத்தை உருக்கித் தமக்குத் திருவருளைத் தேடிக்கொள்ளுமாறு தியாகராச சுவாமிகள் பாடிய பாடல்கள் இசைவாணரின் புலமைச் சிலம்பத்துக்குப் பயன்பட்டு வருவது வருந்தத்தக்கதாகும். சுவாமிகளின் கீர்த்தனைகள் பல அபூர்வ இராகங்களில் செய்யப்பட்டுள்ளன.

## மருத்துவம் & ரசவாதம்:

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலும், பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளில் சித்தர்கள் பேரால் பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றில் காணப்படும் சொல்லாட்சிகளானவை அவற்றுக்குப் பழைமையை மறுக்கின்றன. எனினும் அந்நூல்களில் யாக்கப்பட்டுள்ள செய்யுள்கள் அமைப்பிலும், போக்கிலும் விறுவிறுப்பாக ஓடும் நடையில் காணப்படுகின்றன. மருத்துவ நூல்களும், வாத நூல்களும் காயகற்ப மருந்துகளைப் பற்றி மிகவும் விரிவாகப் பேசுகின்றன.

மருத்துவத்தில் சித்தர் முறை என்பது தமிழகத்திலேயே தோன்றி வளர்ந்த ஒரு கலையாகும். இம் முறையில் மூலிகைகள், தாதுப்பொருள்கள், உயிரினங்கள் ஆகியவை பயன்படுகின்றன. நூற்றெட்டு உபரசங்கள், அறுபத்து நான்கு பாடாணங்கள், இருபத்தைந்து உப்பினங்கள் ஆகியவை சித்தர்கள் கையாண்ட கைம்முறையில் சேர்கின்றன.

உலகம் பலவாகத் தோற்றினாலும், அடிப்படையில் அது ஒரே தன்மை வாய்ந்த ஆதி சடப்பொருள் ஒன்றால் ஆனது என்றும், இவ்வடிப்படைத் தன்மையை மாற்றக் கூடுமானால் பல்வேறு பொருள்களின் இயல்பையே மாற்றிவிடலாம் என்றும், இந்த முறையைக் கையாண்டு பாதரசத்தையும், உப்பையும், கட்டிச் செம்பையும், வெள்ளியையும் உயர் மாற்றுத் தங்கமாக மாற்றலாம் என்றும் சித்தர் வாத நூல்களும், மருத்துவ நூல்களும் கூறுகின்றன.

இக் கொள்கையானது ஐரோப்பிய நாடுகளிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிஞர் கருத்தைக் கவர்ந்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும். பண்டைய சீனத்திலும், எகிப்திலும் செயற்கைப் பொன் செய்யும் முயற்சிகளும், காயகற்ப மருந்து வைப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன; பண்டைய அராபியர்களும் பொன் செய்யும் கலையில் பேரூக்கம் காட்டி வந்தனர்.

இரசவாதக் கலையில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய அறிஞருள் பார்சல்சஸ் (1493-1541) என்ற மருத்துவர் மிகவும் சிறந்தவராகக் கொள்ளப்பட்டுள்ளார். அவருடைய முறைகளுக்கும் தமிழகத்துச் சித்தர் முறைகளுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு

காணப்படுகின்றது. பூநீறு, வழலை, வீரம், பூரம், இலிங்கம், மனோசிலை, கெந்தகம், ஈயம், துத்தநாகம், பாதரசம், செம்பு, தங்கம் போன்றவை சித்த மருத்துவ முறைகளில் கையாளப்படுகின்றன. குரு, முப்பூ, மெழுகு, சூரணம், பற்பம், செந்தூரம் ஆகியன சித்தர் முறை மருந்து வகைகளில் சிலவாம். வாயில் அடக்கிக் கொண்டு வானத்தில் கடுவேகத்தில் பறந்து செல்லக்கூடிய கவனக் குளிகைகளும் சித்தர் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. திருக்குற்றாலத்தில் 'கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்' என்று குற்றாலக் குறவஞ்சியில் அதன் ஆசிரியர் கூறுகின்றார்.

சோதிட நூல்களில் நாடிகள் என்னும் பெயருடைய நூல்கள் பல தமிழகத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் கௌசிக நாடி, கௌமார நாடி, சுக்கிர நாடி, காகபுசுண்டர் நாடி, துருவ நாடி, சப்தரிஷி நாடி, நந்தி நாடி, மார்க்கண்ட நாடி என்பன சில. சோதிடத்துறையில் எழுதப்பட்டுள்ள ஏனைய நூல்களுக்கு இல்லாத சிறப்பு ஒன்று நாடிகளிடம் காணப்படுகின்றது. ஒருவருடைய கைரேகைகளைக் கொண்டோ, அவருடைய சாதகக் குறிப்பைக் கொண்டோ அவருடைய வாழ்க்கையின் முக்கால நிகழ்ச்சிகளையும் நாடிகள் எடுத்துக் கூறுகின்றன. சாதகனின் பெயர், பெற்றோரின் பெயர், பிறந்த ஊர், அவர் பெற்ற கல்வி, செய்யும் தொழில் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளை, நாடிகள் சில சமயம் தெளிவாகவும் சில சமயம் மறைபொருளாகவும் தெரிவிக்கின்றன.

சோதிடர்கள் பொதுவாக, நவாமிசம் (ஓரிராசியில் ஒன்பதில் ஒரு பகுதி, 30/9பாகை) வரையில் கணித்துப் பலன் கூறுவார்கள். ஆனால், நாடிகளில் திரிம்சாமிசம் (1/30 0, அதாவது ஒருபாகை) அல்லது சோடசாமிசம் (1/600, அதாவது அரைப் பாகை) வரையில் மிகவும் நுட்பமாகக் கணிக்கப்பட்டுப் பலன்கள் தரப்படுகின்றன. நம் வியப்பையும் ஆவலையும் ஒருங்கே தூண்டும் இந் நாடி சோதிடக்கலை இன்று தமிழ்நாட்டில் ஒரு சிலர் கையில் மீட்பின்றி மாண்டு வருகின்றது.

## கல்வி & பச்சையப்ப வள்ளல்:

தமிழரின் வாழ்வில் காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாரின் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்துள்ளது. அவர் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் துபாஷாக (மொழிபெயர்ப்பாளராக) அமர்ந்து பணியாற்றியவர். தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தமிழகம் முழுவதிலும் அறக்கட்டளைகள் நிறுவினார்; கோயில் திருப்பணிகள் செய்தார். சென்னையிலும், காஞ்சிபுரம், சிதம்பரம் ஆகிய ஊர்களிலும் பச்சையப்ப முதலியாரின் அறக்கட்டளையால் நிருவகிக்கப்பட்டு வரும் கல்லூரிகளும், உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளும் தமிழகர்கள் அறியாதவையல்ல.

ஒரு நூற்றாண்டாகச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியானது ஏழை மாணவரின் புகலிடமாகச் செயல்பட்டு வந்துள்ளது. பச்சையப்ப முதலியாரின் உடன்காலத்தவரான மணலி சின்னைய முதலியார் என்பாரும் பல அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார். நந்தவனங்கள் அமைத்தார்; சிதம்பரம் சிற்சபையின் பஞ்சாட்சரப் படிக்கு வெள்ளி வேய்ந்தார். அவருடைய அறக்கட்டளைகள் ஒன்று சில மாறுதல்களுக்கு உட்பட்டு இப்போது சென்னையில் 'மணலி மாணவர் விடுதி' என்னும் பெயரில் நூற்றுக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு உணவும் உறையுளும் வழங்கி வருகின்றது.

## இந்து மன்னர்களே, இந்துக் கோயில்களைச் சிதைத்தல்:

பதினெட்டாம் நூற்றாண்டில் கிறித்தவ இஸ்லாம் சமயங்கள் ஏற்றங்கண்டதாலும், இந்து மன்னர்கள் ஆற்றலிழந்து அயல் சமயத்தினரின் படைத் துணையையே

நாடி ஓடியதாலும், இந்துக் கோயில்கள் பாதுகாப்பற்று, பேணுவாரற்றுக் கிடந்தன. அக் காரணத்தால் தமிழகத்துப் பெருங்கோயில்கள் பல போர் அணிகள் நிறுத்தப்பட்டிருந்த பாடி வீடுகளாகவும் கொத்தளங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. மக்கள் எத்துணை அவல நிலையை எய்தியிருக்க வேண்டும், எவ்வளவு செயலற்று, கையற்று வணங்கி வாழ்ந்து வந்திருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது.

சிதம்பரம் கோயிலில் சாஹு ஜி என்ற மராத்தியன் பகைவருக்கு அஞ்சித் தன் படையுடன் அடைக்கலம் புகுந்தான். பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும், ஐதரலியும் மாறி மாறி இக் கோயிலைத் தம் கொத்தளங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இக் கோயில் முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து இராணுவத்தினர் வசம் இருந்து வந்தது. பீரங்கித் தாக்குதல்களால் இக்கோயிலின் மண்டபங்களும், சுற்றாலைகளும், சிறு கோயில்களும் இடியுண்டு அழிந்தன. ஒரு முறை நடராசர், சிவகாம சுந்தரி திருவுருவச் சிலைகளை எடுத்துச் சென்று திருவாரூர்க்கோயில் சபாபதி மண்டபத்தில் வைத்திருந்து, சிதம்பரம் கோயில் இராணுவத்திடமிருந்து விடுதலையான பிறகு மீண்டும் அங்குக் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

சிதம்பரம் கோயிலைப் போலவே திருவண்ணாமலைக் கோயிலிலும் படைவீடுகள் அமைக்கப்பட்டிருந்தன. பல படுகொலைகளும் அக் கோயிலுக்குள் நடைபெற்றதுண்டு. ஒரு முறை ஆர்க்காட்டு நவாபு ராஜாசாயபு தன் பின்னால் விட்டுவிட்டுப்போன பட்டாளம் ஒன்று அண்ணாமலையார் கோயிலினுள் தங்கியிருந்தது. தியாகதுர்க்கம் கின்னேதாரன் கிருஷ்ணாராவு என்ற மராத்தியன் - அவனும் ஓர் இந்து தான் - ஒருநாள் இரவு திடீரென்று தன் படைவீரருடன் கோயிலுக்குள் புகுந்து எழுநூற்றைம்பது சிப்பாய்களைப் படுகொலை செய்தான்; கோயிற் சுற்றாலைகளை இரத்தத்தால் மெழுகினான்.

## அடிக்குறிப்புகள்:

1. S. I. I. II. No, 81.
2. Ep. Rep. 96/42-43; Ep. Rep. 100/42-43.
3. Ep. Ind. XVI. No. 12.
4. I. P. S. No. 304.
5. Ep. Rep. 309/16; Ep. Rep. 378/16.
6. EP. Rep. 17/17; Ep.Rep. 23/17.
7. Ep. Rep. 378/15.
8. Ep. Rep. 1907-p. 16.
9. Ep. Rep. 319/1911.
10. Ep. Rep. 111/39-40.
11. Ep. Rep. 272/1912.
12. Ep. Rep. 162/18.
13. Ep. Rep. 291/23.
14. Ep. Rep. 292/28-29.
15. Ep. Rep. 276/28-29.
16. Ep. Rep. 293/28-29
17. Ep. Rep. 207/29-30.
18. Ep. Rep. 62/33-34.
19. Ep. Rep. 201/36-37.
20. S. I. I. VIII. No. 155.
21. Ep. Rep. 581/2o. Ep. Rep. 584/20
22. Ep. Rep. 77/36-37.
23. Ep. Rep. 91/41-42. Ep. Rep. 101/41-42.
24. Ep. Rep. 81 to 83/ 40-41.
25. Ep. Rep. 375/39-40.

26. Ep. Rep. 9/45-46.

27. Ep. Rep. 23/45-46.

28. Ep. Rep. 25/45-46.

29. Ep. Rep. 59/45-46.

30. Ep. Ind. XXVIII. No. 12.

31. Ep. Rep. go 492/1902, p. 43.

32. Ep. Rep. go 503/1907. p. 17.

33. Ep. Rep. 115/191.

34. Ep. Rep. go 1936-37 Cop. p1. I.

35. Ep. Rep. 490/37-38

36. Ep. Rep. 115/42-43.

37. Ep. Rep. 588/26.

38. Ep. Rep. 208/11.

39. I. P. S. No. 793

40. I. P. S. No. 814.

41. I. P. S. No. 841.

42. I. P. S. No. 692.

43. I. P. S. No. 692 & 799.

44. I. P. S. No. 818.

45. I. P. S. No. 715.

46. I. P. S. No. 601.

47. I. P. S. No. 601.

48. வீரசோ. அலங். 40.

49. திருவருட்பா. 6; 45-47

50. குறுந். 130.

51. தொல். பொருள். செய். 236.

## ஆசிரியர் குறிப்பு:

கே. கே. பிள்ளை எனப்படும் கோலப்ப கனகசபாபதி பிள்ளை, 1954 முதல் 1966 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுத் துறைக்குத் தலைமை தாங்கிய ஓர் இந்திய வரலாற்றாசிரியர் ஆவார். அவர் இந்திய வரலாற்றுக் காங்கிரஸின் தலைவராகவும், தென்னிந்திய வரலாற்றுக் காங்கிரஸின் நிறுவனத் தலைவராகவும் பணியாற்றினார்.

கே.கே.பிள்ளை அவர்கள் சென்னை பல்கலைகழக வரலாற்றுத் துறைக்குப் பெருமை சேர்த்தவர் ஆவார். இவர் 1946-இல் சென்னை பல்கலைகழகத்திலும், 1948-இல் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்திலும் டி.லிட் பட்டங்களைப் பெற்றார். இவரது வரலாற்று ஆராய்ச்சி நூலான "சுசீந்திரம் கோவில்" என்ற நூல் இலக்கியம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் எழுதப்பட்டது ஆகும். பல்வேறு வரலாற்று நூல்களையும் ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

இவரது நூல்கள் பல பல்கலைக்கழகங்களில் பாடங்களாக இடம் பெற்றுள்ளன. மேலும், தென்னிந்திய வரலாற்று ஆய்வை ஊக்குவித்தவர்களில் இவரும் ஒருவர். இவர் திறனாய்வு மூலம் வரலாற்று ஆதாரங்களிலிருந்து வரலாற்று உண்மைகளைக் கண்டறிந்தவர் ஆவார்.